
நற் செய்தி

டீக்கடைகளுக்கு

லிப்டன்ஸ் இது வரை வெளியிட்டதை விட மேலான புது டஸ்ட் டீயை அறிவிக்கின்றனர். அது தான் ஹிமாலயன் பிராண்ட் கோல்டன் டஸ்ட். அது நல்ல மணமும் சுவையுமுள்ளது. எல்லா கடைகளிலும் கிடைக்கும். நல்ல ஹோட்டல்களிலும் போஜன சாலைகளிலும் அதை வழங்குகின்றனர்.



நீங்கள் டீ வாங்கும் கடைகளில்

லிப்டன்ஸ்

ஹிமாலயன் பிராண்ட்

கோல்டன் டஸ்ட் டீ

கேளுங்கள்

அதையே பெறுங்கள்

LTK 122 TM

கல்கி
பொருளடக்கம்

மலர் 6 } இதழ் 28 } 1947 பிப்ரவரி 9 { வியய தை 27

என்ன சேதி?	...	...	5
நிகழ்ச்சிச் சித்திரம்	சாஸ்திரி	...	8
பிரிட்டனுக்கு சோதனை	...	...	9
அக்கப்போர்	"சக்கைப்போடு"	...	12
அரசியல் நிர்ணய சபை	உம்மன்	...	15
வான சஞ்சாரம்	இசைத் தேனீ	...	19
சோலைமலை இளவரசி	கல்கி	...	20
அவள் நினைவு	எஸ். வி. எஸ்.	...	27
படித்துப் பார்!	...	...	31
காலக்ஷேபம்	...	...	32
தபசி வருகிறார்!	டி. கே. சி.	...	33
இரு நண்பர்கள்	சுதர்சன்	...	36
பாப்பா மலர்	வி. எஸ். ஸ்ரீனிவாசன்	...	43
'மைக்'கின் மகாத்மியம்	சுபஸ்ரீ	...	44

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனை.

"யாரோ? இவர் யாரோ? எந்த ஊரோ? என்ன பேரோ?" என்று தவிக்கும் நமது நேயர்களுக்கு, "வேறு யாருமில்லை; மேன்மை தங்கிய கொச்சி மகாராஜா கேரள வர்மா அவர்கள்தான்!" என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இந்தியாவிலே ஹைதராபாத் என்ன, பரோடா என்ன, மைசூர் என்ன, காஷ்மீர் என்ன, போபால் என்ன—இப்பேர்ப்பட்ட பெரிய பெரிய சமஸ்தானங்களும் படா படா மகாராஜாக்களும் இருக்கும்போது சின்னஞ் சிறு கொச்சி சமஸ்தானத்து மகாராஜா நமது அட்டைச் சிம்மாசனத்தில் வீற்றிருப்பதற்குக் காரணம் என்னவென்று கேட்டால், அதற்கும் பதில் தயாராக வைத்திருக்கிறோம்:—"கடுகு சிறிதானாலும் காரம் பெரிது" என்பதுபோல் கொச்சி சமஸ்தானம் சிறிதாயிருந்தாலும் அதன் மகாராஜா மற்றவர்கள் செய்யாத அரும் பெரும் காரியங்களைச் செய்திருக்கிற படியால்தான்.



கடவுள் பிரிட்டிஷாரை உலகத்தின் ஸ்பெஷல் போலீஸாக நியமித்திருக்கிறார் அல்லவா? அதுபோலவே சமஸ்தான மக்களை ஆளும் அதிகாரத்தைக் கடவுள் மகாராஜாக்களிடம் பரம இரகசியமாகக் கொடுத்து வைத்திருப்பதாகச் சிலர் சொல்வதைக் கேட்டு வருகிறோம்.

அதற்கு மாறாக, மகாராஜாக்களின் அதிகாரமெல்லாம் மகா ஜனங்கள் கொடுத்ததுதான் என்னும் கொள்கையைக் கொச்சி மகாராஜா ஒப்புக்கொண்டிருக்கிறார்! ஒப்புக்கொண்டதோடு கூட அந்த அதிகாரத்தை மகாஜனங்களிடமே திருப்பிக் கொடுத்து விடவும் அவர் தயாராயிருக்கிறார்.

அன்றியும் மலையாளம், திருவாங்கூர், கொச்சி ஆகிய பிரதேசங்களைச் சேர்த்துத் தனிக் கேரள மாகாணமாகச் செய்யும் யோசனையையும் கொச்சி மகாராஜா பரிபூரணமாக அங்கீகரித்து ஆதரவு தந்திருக்கிறார்.

ஆகவே, கொச்சி மகாராஜா எல்லாவிதத்திலும் பாராட்டப்பட வேண்டியவர் என்று ஸ்பஷ்டமாக ஏற்படுகிறது. இவ்வளவெல்லாம் நல்ல பெயர் வந்ததற்குத் திருஷ்டி பரிகாரமாகச் சில காலமாய்க் கொச்சி ராஜ்யத்தில் அடக்குமுறை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதைப் பற்றிப் பத்திரிகைகளில் படித்தோம். இதனால் கொச்சி மகாராஜாவின் புகழுக்கும் பெயருக்கும் களங்கம் ஏற்படுமோ என்று பயந்தோம். அப்படிக்கெல்லாம் இல்லாமல், அடக்குமுறைகள் வாபஸாகி, சிறைப்பட்டவர்களும் விடுதலையானார்கள் என்று கடைசியாக வந்திருக்கும் செய்தி கொச்சி மகாராஜாவிடம் நமது மரியாதையைப் பன்மடங்கு அதிகமாக்கியிருக்கிறது.

மங்கையர்களின் முக விலாசத்திற்கே

அர்ப்பணம் செய்யப்பட்டது.



ஜாப்கோ ஸ்னோ

உங்கள் எழிலை அதிகப் படுத்த இதைவிடச் சிறந்தது வேறெதுவும் இல்லை

•

ஜயபாரதம் கோ.,
மல்லேஸ்வரம் - பெங்களூர்



குலதனம் போலக் கேச தனமும், சில குடும்பங்களில் பரம்பரையாக வருவதுண்டு. கேச தனம் படைத்தவர், அது நஷ்டமாகாமல் **கேசவர்த்தினி**யைக் கொண்டு காப்பாற்றுங்கள். படைக்காதவர் **கேசவர்த்தினியைக்** கொண்டு அதை அடையுங்கள். சிறு வயது முதல் **கேசவர்த்தினி** ஒன்றையே உபயோகித்து வருவதால், இள நரை வழுக்கைகளைத் தடுத்துக் கேச ஆரோக்கியத்தையும் கேச சம்பத்தையும் தவறாமல் பெறுங்கள்.

மெலிந்து இளைத்த சிறுவனும் தேகப்பயிற்சி ஆகாரங்களால் பருத்து அழகிய சதைக் கட்டைப் பெறுவது போல, அற்ப கூந்தல் படைத்தவரும் **கேசவர்த்தினியைக்** கொண்டு அபரிமிதமான கூந்தலைப் பெறலாம். குழந்தையின் கூந்தலைக் கேசவர்த்தினி கொண்டே விருத்திசெய்யுங்கள்.

கேசவர்த்தினி

கூந்தலைப் பாதுகாப்பது, விருத்தி செய்வது, அழகு படுத்துவது

விலை அணா 12.

(மேற் செலவு வேறு)

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும் போலிகளை வாங்கி மோசம் போகாதீர்கள் "கேசவர்த்தினி, தென்னிந்திய ரஸாயனசாலை" என்ற பெயர்களைக் கவனித்து வாங்குங்கள்.

தயாரிப்பவர் :

தென் இந்திய ரஸாயனசாலை,
ஆர். எஸ். புரம், கோயமுத்தூர்

கல்கி

மலர் 6 | தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 28

என்ன சேதி?

மந்திரி சபை நெருக்கடி

"புளுகுகளில் மூன்று வகை உண்டு. அவை: (1) புளுகு; (2) அண்டப் புளுகு; (3) பத்திரிகைச் செய்தி—என்பனவாம்."

மேலே கண்ட அநுபவ ஞானியின் வாக்கு எவ்வளவு உண்மையானது என்பதைச் சென்ற வாரத்தில் சென்னை மாகாண வாசிகள் நன்கு உணர்ந்தார்கள்.

சென்னை மாகாண மந்திரி சபைக்கு நெருக்கடி ஏற்பட்டிருப்பது பற்றி அவ்வளவு அண்டப் புளுகுகள் பத்திரிகைகளில் வந்து கொண்டிருந்தன.

சில புளுகுகளைச் சர்க்கார் விளம்பர இலாகா மறுதளித்தது. வேறு சில புளுகுகளை அந்தந்தப் பத்திரிகைகளே மறுதளித்துக் கொண்டன. இன்று வெளியான செய்தியை மறுநாள் மறுதளித்த போது, காலுக்காக "இன்று மந்திரி சபை நெருக்கடியின் நிலைமை மாறிவிட்டது!" என்று தெரிவிக்கப்பட்டது.

வெளியேற்ற முயற்சி

நமது அக்கப்போர் நிருபர் விசாரித்துத் தெரிந்துகொண்ட வரையில் மந்திரி சபை நெருக்கடியைப் பற்றிய உண்மையான நிலைமை இதுதான்:—

முன்னே ராஜாஜியை வெளியேற்றுவதில் மும்முரமாயிருந்த கோஷ்டியார் இன்று பிரதமர் பிரகாசத்தை வெளியேற்றுவதிலும் மும்முரமாயிருக்கிறார்கள். இதற்காக, ஸ்ரீ பிரகாசத்தின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவர அவர்கள் பெரு முயற்சி செய்து வருகிறார்கள்.

ஆனால் இது அவ்வளவு சுலபமாக நடக்கும் காரியமாயில்லை.

ராஜாஜி எதிர்ப்புக் கட்சியைச் சேர்ந்தவர்களில் பலர் பிரகாசம் சர்க்காரில் மந்திரிகளாகவும் பார்லிமெண்டரி காரியதரிசிகளாகவும் இருப்பதால் அவர்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் கையெழுத்துப் போட முடியாது. பதவியை முன் கூட்டியே ராஜீனாமா செய்வதற்கும் அவர்கள் தயாராயில்லை; அரசனை நம்பிப் புருசனைக் கைவிட அவர்களுக்கு விருப்பமில்லை.

ஆந்திர எம். எல். ஏ.க்களில் சுமார் முப்பது நாற்பது பேர் பிரகாசத்தைப் போக்கிவிடத் துடியாயிருக்கிறார்கள். ஆனால் அதில் வெற்றி பெறாவிட்டால் ஆந்திர தேசத்தில் தங்கள் கதி அதோகதியாகலாம் என்று பயப்படுகிறார்கள்.

ஆபத்து நேருமா?

ராஜாஜி கோஷ்டியார் சுமார் 30 பேரின் ஆதரவு கிடைத்தால், மேற்படி நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிச்சயமாக நிறைவேறும் என்று எதிர்பார்க்கலாம்.

ஆனால், ராஜாஜி கோஷ்டியார் ஆந்திர கேசரியை வெளியேற்றிய பிறகு வரப் போகும் புதிய தலைவர் யார் என்றும், அவர் காரியக் கமிட்டியின் உத்தரவுப்படி காரியம் நடத்தத் தயார்தானா என்றும் தெரிந்துகொள்ள விரும்புகிறார்கள். சாட்சதனுக்குப் பதில் போட்சதன் வருவதற்கு உதவி செய்ய அவர்கள் தயாராயில்லை.

இந்த நிலைமையில், தமிழ்நாட்டு ராஜாஜி எதிர்ப்புக் கோஷ்டியார் பிரகாசம் மந்திரி சபையிலிருந்து தங்கள் பிரதிநிதிகளை வாபஸ் பெறுவதற்குத் தயாராகி, இனி மேலாவது மேலிடத்துப் (காரியக் கமிட்டியின்) புத்திமதிப்படி நடப்பதற்கும் ஒப்புக்கொண்டாலன்றிப் பிரகாசம் மந்திரி சபைக்கு ஆபத்து நேருமென்று எதிர்பார்ப்பதற்கில்லை.

இதற்கிடையில் பிரதம மந்திரி பிரகாசம் யாரும் எதிர்பாராத மதி நுட்பத்துடனும் இராஜ தந்திரத்துடனும் காரியங்களைச் செய்து மகாத்மாவின் ஆசியையும், வரவர மேலிடத்து ஆதரவையும் பெற்றுத் தமது நிலைமையைப் பலப்படுத்திக் கொண்டு வருகிறார் என்பது பகிரங்க இரகசியம்.

வாபஸ் பெற்றதேன்?

மந்திரி சபை 'நெருக்கடி' சம்பந்தமாக எழுந்த புளுகுகளில் ஒன்று, மதுரை ஸ்ரீ ஏ. வைத்திநாதய்யரைப் பற்றியதாகும். பிரகாசம் சர்க்காரின் அவசரப் பாதுகாப்புச் சட்டத்தைக் குறித்துக் காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தில் ஸ்ரீ ஏ. வைத்திநாதய்யர் ஒரு கண்டனத் தீர்மானம் கொண்டு வந்தார்; தீவிரமாகப் பேசினார்.

வேறு சில காங்கிரஸ் அங்கத்தினர்கள், ஸ்ரீ ஏ. வேதரத்தினம், ஸ்ரீ என். எம். ஆர். சுப்பராமன், கௌரத் தலைவர் ஸ்ரீ கேலப்பன் போன்றவர்கள் மேற்படி அவசரப் பாதுகாப்புச் சட்டத்தின் அவசியத்தை வற்புறுத்தியும் பொது ஜனங்கள் அதை வரவேற்பதைப் பற்றியும் பேசினார்கள்.

பிரதமர் பிரகாசம் மேற்படி அங்கத்தினர்களின் அபிப்பிராயங்களைக் கவனித்து, அவசரச் சட்டத்திலுள்ள ஆட்சேபகரமான அம்சங்களை நீக்கி விட்டுச் சட்டசபையில் மசோதா கொண்டு வருவதாக வாக்களித்தார். அதன்பேரிலும், காங்கிரஸ் கட்சிக் கட்டுப்பாட்டை முன்னிட்டும் ஸ்ரீ ஏ. வைத்திநாதய்யர் தீர்மானத்தை வாபஸ் வாங்கிக் கொண்டார்.

மேற்படி காரணத்துக்காகவே ஸ்ரீ வைத்திநாதய்யர் வாபஸ் வாங்கிக் கொண்டார் என்பது சர்க்கார் அறிக்கையிலேயே வெளியாகி யிருக்கிறது.

எனினும், "பிரகாசம்காரு மந்திரி பதவி கொடுப்பதாக வாக்களித்ததின் பேரில் தான் ஸ்ரீ வைத்திநாதய்யர் கண்டனத்தை வாபஸ் பெற்றுக் கொண்டார்" என்று ஒரு செய்தி வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் வெளியாயிற்று.

"அண்டப் புளுகு"க்குத் தக்க உதாரணம் இதைக் காட்டிலும் வேறு கிடைக்கவே கிடைக்காது.

மனச்சாட்சியின் கட்டளைக்கு அணுவளவும் மாறாமலும் சத்திய மார்க்கத்திலிருந்து சிறிதும் பிறழாமலும் நடக்கும் அரசியல் வாதி ஒருவர் சென்னை மாகாணத்தில் உண்டு என்றால் அவர் மதுரை ஸ்ரீ ஏ. வைத்திநாதய்யர்தான்.

பத்து மாதத்துக்கு முன்பே ஸ்ரீ ஏ. வைத்திநாதய்யரை மந்திரிப் பதவி தேடிக் கொண்டு வந்தது. இப்போதும் எந்த க்ஷணமும் காத்திருக்கிறது. எனவே, மந்திரி பதவிக்காக அவர் கண்டனத் தீர்மானம் கொண்டு வரவும் வேண்டாம்; அதை வாபஸ் வாங்கிக் கொள்ளவும் வேண்டியதில்லை.

விஷயம் எப்படி?

இப்போது பாலஸ்தீனத்தில் யூதர்களின் பயங்கர இயக்கம் வலுத்து வருகிறது. யூதர்கள் பெரிய பெரிய பிரிட்டிஷ் ராணுவ அதிகாரிகளை யெல்லாம் கடத்திக் கொண்டு போய், பட்டப் பகலில் பல பேருக்கு முன்னிலையில் சவுக்காலடித்து வீட்டுக்கு அனுப்பி வைக்கிறார்கள். பிரிட்டனுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. ஆனால், மாஜி பிரிட்டிஷ் பிரதம மந்திரி வின்ஸ்டன் சர்ச்சிலுக்கு என்ன செய்வதென்று புரிந்திருக்கிறது. மேற்படி யூத பயங்கரத்திலிருந்து பிரிட்டன் தப்புவதற்கு அவர் ஒரு வழி சொல்லி யிருக்கிறார்.


இனிமேல் பாலஸ்தீனத்தை பிரிட்டன் மாத்திரம் தனியாக நிர்வகிப்பது கஷ்டமென்றும், அமெரிக்காவும் பிரிட்டனுடன் சேர்ந்து மேற்படி நிர்வாகத்தை நடத்த ஒப்புக்கொள்ள வேண்டுமென்றும், இல்லாவிட்டால் மேற்படி நிர்வாகப் பொறுப்பை ஐக்கியதேச மகா சபையிடம் ஒப்படைத்து விட வேண்டுமென்றும் சர்ச்சில் சொல்லி யிருக்கிறார். இன்னும் தெளிவாகவும் பச்சையாகவும் சொல்லப் போனால், யூதர்கள் கொடுக்கும் உதைகளைப் பிரிட்டன் மாத்திரம் வாங்கிக் கொள்ளாமல் அமெரிக்காவும் அதைப் பங்கிட்டுக் கொள்ள வேண்டுமென்று கூறுகிறார்.

இத்தனை நாளும் பாலஸ்தீனத்தைச் சுரண்டி வந்தபோது பிரிட்டன் அமெரிக்காவின் உதவியைக் கோரவில்லை. உதை வாங்கும்போது மாத்திரம் அமெரிக்காவின் உதவி பிரிட்டனுக்குத் தேவையா யிருக்கிறது! பேஷ்! விஷயம் எப்படி?

ஜவாஹரின் கேள்வி

சென்ற வருஷம் டிசம்பர் மாதம், எல்லைப்புறத்திலுள்ள மலை ஜாதியினர் சிலர் மேற்படி மாகாணத்திலுள்ள இரண்டு கிராமங்களில் புகுந்து அங்குள்ள கடைகளைக் கொள்ளை யடித்து விட்டுச் சிலரைக் கொன்று விட்டும் போனார்கள்.

முன்பெல்லாம் — அதாவது அதிகார வர்க்க சர்க்கார் பதவியிலிருந்த போதெல்லாம் - இம்மாதிரியாக ஏதாவது கொலையோ கொள்ளையோ எல்லைப்புறத்தில் நடந்தால், உடனே விமானங்களை அனுப்பி அந்த மலை ஜாதி மக்கள்மீது ஈவு இரக்க மில்லாமல் குண்டு போடச் சொல்வது வழக்கம்.




இந்தத் தடவை சென்னைக் காங்கிரஸ் மாளிகை மைதானத்தில் நடந்த சுதேசிப் பொருட் காட்சி, பொருளாதார நஷ்டத்தோடு முடியாமல் ஓரளவு வெற்றியுடன் முடிவடைந்ததற்குக் காரணம், இந்தப் படத்தில் காணப்படும் ஆடல் பாடல் மேடைதான். மேடையில் தற்சமயம் காட்சியளிப்பவர்கள் ஆடல் பாடல் கலைஞர்கள் அல்ல; இசை விழா ஏற்பாடுகளைத் திறமையாகவும் வெற்றிகரமாகவும் நடத்தி வைத்த தேசபக்தர் ஸ்ரீ ச. கிருஷ்ணய்யர் பி. ஏ. பி. எல். தமது அறிக்கையைப் படித்துக் கொண்டிருக்கிறார். சென்னை ஷெரிப் ஸ்ரீ ராமசாமி நாயுடு அக்கிராசன பீடத்தை அலங்கரிக்கிறார். டிசம்பர் 27வ-யிலிருந்து ஜனவரி 26வ-முடிய 31 தினங்களில் 46 கச்சேரிகள் நடந்தன. மதுரை மணி, ஸ்ரீ தண்டபாணி தேசிகர், ஸ்ரீமதி பாலசரஸ்வதி முதலிய பெரிய வித்வத் கோஷ்டியைச் சேர்ந்தவர்களும், பல இளம் வித்வான்களும் உற்சாகமாகக் கச்சேரி செய்தார்கள். ஒருவிதத் தகராறும் சண்டை சச்சரவும் இல்லாமல் வித்வான்கள்—ரஸிகர்கள் எல்லோரும் சந்தோஷப்படும்படியான முறையில் மேற்படி இசை விழாவை நடத்திவைத்த ஸ்ரீ ச. கிருஷ்ணய்யர் அவர்களுக்குக் கண்காட்சியில் கடைவைத்த வியாபாரிகள் சார்பாகத் தமிழ்ப்பண்ணை அண்ணாமலை புகழ்மாலைகளைச் சூட்டினார்.

ஆனால், இடைக்கால சர்க்கார் — அதிலும், பண்டித ஜவாஹர்லால் நேரு அதிகாரத்திலிருக்கும் வெளி நாட்டிலாகா, அந்த முறையைக் கையாளுமா? குண்டு வீசக் கூடாதென்று தடுத்துவிட்டு, மேற்படி பயங்கரக் குற்றங்களைச் செய்த மலை ஜாதியினருக்கு வேறு வகைத் தண்டனை கொடுத்தார்கள். அதாவது, அவர்கள் கூட்டு அபராதமாக 75000 ரூபாயும், 75 துப்பாக்கிகளும் கொடுப்பதுடன், நன்னடக்கைப் பணயமாக 40 பேரையும் ஒப்படைக்க வேண்டுமென்று சொன்னார்கள்.

இது முஸ்லிம் லீகுக்குப் பிடிக்கவில்லை. இதைக் கண்டித்து, சித்திக் அலி கான் என்ற லீக் அங்கத்தினர் இந்திய சட்ட சபையில் ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் கொண்டு வந்தார். அவரை ஆதரித்தும் சிலர் தீவிரமாகப் பேசினார்கள். ஆனால் பண்டித நேரு அவர்களை இடைமறித்து "சர்க்கார் செய்தது சரியல்லவென்றால், வேறு என்ன செய்வது, நீங்களே சொல்லுங்கள்!" என்று கேட்டபோது அவர்களில் யாரும் வாயைத் திறக்கவே இல்லை.

கடைசியில் ஒத்தி வைப்புத் தீர்மானம் வோட்டுக்கு விடப்பட்டுத் தோற்றது.

முஸ்லீம் லீக் 'தோற்றது' என்று சொல்வதைக் காட்டிலும் 'தோல்வியை விலைக்கு வாங்கிக்கொண்டது' என்றுதான் சொல்ல வேண்டும். உண்மையில், லீக் செய்திருக்க வேண்டியது என்ன? விமானத்திலிருந்து குண்டு போடுவதை நிறுத்தி வேறு முறையைக் கையாண்டதற்காக ஜவாஹர்லால்ஜியை வாழ்த்தியிருக்கவேண்டும். வாழ்த்தவேண்டிய சந்தர்ப்பத்தில் தூற்றியவர்களின் தோல்வியைப் பற்றி யார்தான் அனுதாபம் காட்ட முடியும்?


முஸ்லிம் லீக்கின் கராச்சி தீர்மானத்துக்கு வைஸ்ராய் வேவல்தான் பதில் சொல்ல வேண்டு மென்று காங்கிரஸ் தலைவர்கள் சொல்லி விட்டார்கள்.
இந்தியாவுக்கு பிரிட்டிஷார் கொடுக்க வேண்டிய ஸ்டர்லிங் கடனைப்பற்றிப் புது டில்லியில் பேச்சு வார்த்தை நடந்து வருகிறது. பிரிட்டிஷ் யோசனையின் பிரகாரம் சென்னைக் குழாய்த் தண்ணீரைப் போல்தான் சொட்டுச் சொட்டாய் வசூலிக்க நேரும் என்று தெரிகிறது.
பாஞ்சாலக் குழப்பம் சம்பந்தமாக மேற்படி மாகாண சர்க்கார் சமீபத்தில் வெளியிட்ட அறிக்கையில் 'மாணவர் ஆர்ப்பாட்டம் விளையாட்டுக் காரியந்தான்!' என்று சொல்கின்றனர். மாணவர் விளையாட்டு சில சமயம் வினையாகவும் முடியக்கூடும் அல்லவா?
மதுவிலக்குச் சட்டத்தை இன்னும் சில ஜில்லாக்களில் அமுலுக்குக் கொண்டு வருவதாக சென்னை மந்திரிசபை முடிவு செய்திருக்கிறது.
ஐரோப்பிய தேசங்களில் பிரயாணம் செய்து கொண்டிருக்கும் இந்தியத் தூதர் ஸ்ரீ வி.கே.கிருஷ்ண மேனன், இந்தியாவுக்காக மற்றத் தேசங்களின் சிநேகத்தைச் சுறுசுறுப்பாகத் தேடிக் கொண்டிருக்கிறார்.

பிரிட்டனுக்குச் சோதனை

ஜின்னா சாயபுவும் அவரது முஸ்லிம் லீக் கோஷ்டியினரும் ஒருவிதத்தில் அதிர்ஷ்டசாலிகள்தான்.

சாதாரணமாகத் தலைவர் பதவியென்றால் முள் மகுடத்திற் கொப்பாகும். தலைவர் பதவி வகிப்போர் எண்ணிப் பேசவேண்டும். உன்னிக் காரியங்களைச் செய்யவேண்டும்.

இல்லாவிடில் அவர்களை நம்பியிருக்கும், அவர்கள் மீது அளவற்ற அபிமானமும் அந்தரங்க பக்தியும் கொண்டிருக்கும் கோடிக்கணக்கான ஜனங்களுக்குச் சகிக்க முடியாத துன்பமேற்பட்டு விடலாம். அதன் விளைவாக ஜனங்களின் அரசியல், பொருளாதார வளர்ச்சியும் அதோகதியாகி விடலாம்.

தலைவர்கள் தியாகிகளாக மட்டுமிருந்தால் போதாது. பொறுமையே உருவெடுத்தவர்களாக மட்டுமிருந்தால் போதாது. களங்கமற்ற சீலர்களாக மட்டுமிருந்தால் போதாது. இந்த அரும்பெரும் குணாதிசயங்களுடன், அரசியல் பொருளாதார சாஸ்திரங்களில் மகா பண்டிதர்களாகவும் தீர்க்க தரிசிகளாகவும் கூடத் திகழ வேண்டும்.

அப்படியானால்தான் கோடிக்கணக்கான ஜனங்கள் நிரந்தரமாக சுதந்திரமும் சுபிட்சமும் பெற்று விளங்குவது சாத்தியமாகும்.

இத்தகைய குணாதிசயங்கள் பொருந்திய தலைவர்களைப் பெறும் பாக்கியம் இந்திய மகா ஜனங்களுக்குப் பூரணமாக இருக்கிறதென்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

அப்படியிருந்தும், அத்தலைவர்களின் அற்புத கைங்கரியங்களுக்கு இடைவிடாது முட்டுக்கட்டை போடும் அதிர்ஷ்டசாலிகளான தலைவர்களடங்கிய ஒரு கூட்டமும் இந்தியாவுக்கு வாய்த்திருக்கின்றதே என்பதுதான் நமது துக்கமாகும். ஏனெனில் அவர்களின் அதிர்ஷ்டம் ஜனங்களுக்குத் துன்பமாக முடிகின்றது.

அவர்கள் முள் மகுடங்களைத் தரிக்கவில்லையென்பதற்காகவே அவர்களை அதிர்ஷ்டசாலிகள் என்று வர்ணிக்க வேண்டியிருக்கிறது.

நூறு ஆண்டுகளுக்கு மேலாகத் தேய்ந்தும் உளுத்தும் போன பட்டங்களைத் துறந்ததற்கு அதிகமாக அவர்கள் தியாகம் எதுவும் செய்தறியாரென்பது பிரசித்தம்.

மற்றும் அவர்களில் பலரும் பல்டியடித்துப் பிரசித்தி பெற்றவர்கள். மூன்று, நான்கு பல்டிகள் அடித்தும் மீசையில் மண் ஒட்டாத சில பிரமுகர்களும் அந்தக் கோஷ்டியில் முக்கிய ஸ்தானம் பெற்றிருக்கின்றனர்.

அதாவது, தேசீய வாதியாக இருந்து பின்னர் வகுப்பு வாதியாக மாறுவது, மீண்டும் தேசீயத்தைப் போர்வையாகப் போட்டுக் கொள்ளுவது, அதிலிருந்து மறுபடியும் வகுப்பு வாதத்தின் உச்ச ஸ்தானத்திற்கு வந்து விடுவது, — இவ்வாறு பல பல்டிகள் அடித்துப் பொதுஜனங்களைத் திகைக்கச் செய்தவர்களே அந்தக் கோஷ்டியின் தூண்களாக விளங்கி வருகின்றனர்.

சுருங்கக் கூறுமிடத்து, ஜனாப் ஜின்னா முதல் பஸ்லுல் ஹக், சுஹ்ராவர்த்தி முதலிய பல பிரமுகர்களும் மேற்கூறியவாறு பல்டி யடித்தவர்களே என்பதை ஞாபக மூட்டுகிறோம்.

* * *

அரசியல் சண்டமாருதத்தினால் ஏற்படும் அசாதாரணமான நிலைமைகளைச் சமாளிப்பதற்காகவும், ஓரளவு மாறுபட்ட அரசியல் அபிப்பிராயம் கொண்டுள்ள கட்சிகளுக்கும் விட்டுக் கொடுத்து, எவ்வளவு சாத்தியமோ அவ்வளவு தூரம் தேசத்தில் ஒற்றுமையை ஏற்படுத்துவதற்காகவும் தலைவர்கள் தங்களுடைய தீவிரப் போக்கையும் முறைகளையும், நேர்மையாகவும் தங்கள் இறுதி லட்சியத்திற்குப் பங்கம் நேராதவாறும் மாற்றிக் கொள்ளுவதுண்டு.

அதற்காக அவர்கள் ஊண் உறக்கமின்றிப் பல நாட்கள் தீர்க்காலோசனை செய்வார்கள். தீவிரமானதாயினும், தீவிர மற்றதாயினும் அவர்கள் செய்யும் முடிவு, ஜாதி மத சமய பேதமின்றிக் கோடிக்கணக்கான ஜனங்களின் எதிர்கால க்ஷேமத்தையே குறிக்கோளாகக் கொண்டிருக்கும்.

அவர்கள் தீர்மானம் செய்யும் போது சுயநலம், பிடிவாதம், வகுப்பு

வாத வெறி, தான் என்ற மமதை எதுவும் வந்து குறுக்கிடாது.

ஆனால் ஜனாப் ஜின்னா கோஷ்டியினருக்கு இத்தகைய கஷ்டம் எதுவுமில்லை. எதிர்காலத் திட்டம் எவ்வாறு வகுப்பதென்று மூளையை உடைத்துக் கொள்ள வேண்டிய அவசியமும் இல்லை. ஏனெனில், காங்கிரஸ் அவர்களுடைய வேலையைச் சுலபமாக்கி விடுகிறது!

* * *

காங்கிரஸ் தலைவர்கள் 20-ந் தேதி கூடி, ''பிரிட்டிஷ் மந்திரிகள் கோஷ்டியின் அறிக்கை அவ்வளவு மோசமானதல்ல'' என்று தீர்மானம் செய்தால், முஸ்லிம் லீக்கர்கள் 25-ந் தேதி கூட்டம் கூடி, பிரிட்டிஷ் மந்திரிகள் அறிக்கை படுமோசமானதென்றும், உலகிலுள்ள முஸ்லிம்களையெல்லாம் அடிமைகளாக்கி விட வேண்டுமென்பதே அவ்வறிக்கையின் நோக்கமென்றும், முஸ்லிம் உலகம் பெருந் துரோகத்திற்குள்ளாகி விட்டதென்றும் கூக்குரலிடுவார்கள்.

ஏழைகளை நசுக்கும் உப்பு வரியை ஒழிக்க வேண்டுமென்று காங்கிரஸ் கூறினால், உப்பு வரியால் ஏழைகள் பாதிக்கப்படுகிறார்களென்பது காங்கிரஸ்காரர்களின் கற்பனையென்றும், ஆகையால் அதை ரத்துச் செய்ய வேண்டிய அவசியம் இல்லையென்றும் லீக் தலைவர்கள் வைஸ்ராயைக் கெஞ்சுவார்கள்.

''இதுதான் எங்களுடைய திட்டம். காங்கிரஸ் தலைவர்கள் சேர்ந்துகொண்டாலும், சேரா விட்டாலும் நாங்கள் மற்றவர்களைக் கொண்டு இடைக்கால சர்க்கார் அமைப்போம்'' என்று வைஸ்ராய் சொன்னால், அவரது ''தர்ம நியாயத்தையும் பாரபட்சமற்ற தன்மையையும்'' லீக் தலைவர்கள் பெரிதும் போற்றுவர்.

''அற்பத் தகராறுகளும் அபிப்பிராய பேதங்களும் தீர்ந்து, இடைக்கால சர்க்கார் அமைக்க காங்கிரஸ் சம்மதித்ததைக் குறித்து நான் சந்தோஷமடைகிறேன்'' என்று வைஸ்ராய் கூறினால், ''அதெப்படி காங்கிரஸ் சம்மதிக்கலாம்? முஸ்லிம் உலகைக் கவிழ்க்க வேண்டும் என்ற உத்தேசத்துடன்தான் காங்கிரஸும் பிரிட்டிஷாரும் சதியாலோசனை செய்து இவ்வாறு முடிவு செய்திருக்கிறார்கள்'' என்று ஜனாப் ஜின்னா ஆவேசத்துடன் ஓர் அறிக்கை வெளியிடுவார்.

''நீங்களும் எத்தனையோ நாட்கள் கஷ்டப்பட்டு, பிறரையும் கஷ்டப்படுத்தி ஒரு திட்டம் தயாரித்தீர்கள். அதில் எத்தனையோ குறைகளும் குற்றங்களும் இருப்பினும், அதை நாங்களும் ஒப்புக் கொண்டு விட்டோம். இந்நிலைமையில், அதை அடியோடு மாற்றும் நோக்கத்துடன் எங்களை லண்டனுக்கு அழைப்பது சரியல்ல'' என்று காங்கிரஸ் தலைவர்கள் கூறியதும், ஜனாப் ஜின்னா என்ன சொன்னார் தெரியுமா?

''லண்டனில் மகாநாடு நடத்த வேண்டியது அவசியமென்று நான் அப்போதே சொன்னேனே! சர்ச்சில், சைமன் போன்ற கண்ணியம் பொருந்திய கனவான்கள் பிரிட்டனில் இருக்கும் வரையில் நமக்கு நீதி கிடைக்குமென்பது எனக்குத் தெரியும். ஆகையால் சலோ லண்டன்!'' என்று சொல்லிவிட்டு லண்டனுக்குப் பாய்ந்தார் பாகிஸ்தான் பிரபு.

லண்டன் மகாநாட்டின் விளைவாக பிரிட்டிஷ் சர்க்கார் பல்டி யடித்ததும், அவர்களின் துரோகத்தைக் கண்டு இந்தியா மாத்திரமல்ல, உலக நாடுகளே திடுக்கிட்டதும், சர்ச்சிலும் ஜின்னா கோஷ்டியினரும் மாத்திரம் தங்கள் மனம் குளிர்ந்ததென்று பகிரங்கப் பிரகடனம் செய்ததும் நேயர்கள் அறிந்ததே.

அதாவது காங்கிரஸ் தலைவர்கள் என்ன தீர்மானம் செய்கிறார்களோ, அதற்கு நேர்மாறாக முடிவு செய்வதுதான் ஜின்னா கோஷ்டியாரின் லட்சியமென்பதைச் சென்ற சில வருஷங்களாக நிகழ்ந்து வந்துள்ள சம்பவங்கள் சிறிதும் சந்தேகமின்றி உலகமறிய நிரூபித்திருக்கின்றன.

* * *

நியாய வாதம் செய்ய வகையில்லாதவர்கள் நேர்மையற்ற வசைப் புராணத்தில் ஈடுபடுவது வழக்கம். அதுபோலவே காங்கிரஸையும், காந்திஜியையும் கூட, நாக்கில் நரம்பின்றித் தூற்றும் சந்தர்ப்பத்தைத் தமது வாராந்த அறிக்கைகளிலும் கைவிட மனமில்லாத ஜனாப் ஜின்னா, அகில இந்திய முஸ்லிம் லீக் கூட்டத்திலா அச் சந்தர்ப்பத்தை இழக்க இசைவார்? அக் கூட்டத்தில் அவர் காங்கிரஸ் மீதும் காங்கிரஸ் சர்க்கார்கள் மீதும் ஒரு நீண்ட அத்தியாயம் வசைமாரி பொழிந்திருப்பதைக் குறித்து ஆச்சரியப் படுவதற்கில்லை.

ஆயினும், உலகத்தின் நன்மதிப்பைப் பெற்றவர்களும் தியாக சீலர்களும் அடங்கிய காங்கிரஸ் மகா சபையை முஸ்லிம் லீக் கண்ணிய மற்ற முறையில் தாக்கி யிருப்பது, லீக்கர்களின் பக்கம் நியாயம் என்பது மருந்துக்கும் இல்லை யென்பதையே காட்டுகிறது. நியாயமிருந்தால், ஏன் வசைப் புராணத்தில் இறங்க வேண்டும்?

அவர்களின் வசைமாரி ஒருபுற மிருக்கட்டும். அவர்கள் செய்துள்ள தீர்மானத்தின் சாரம்தான் என்ன?

காங்கிரஸ் கட்சியினரைத் தவிர வேறெவரும் அரசியல் நிர்ணய மகா சபையில் பிரதிநிதித்துவம் வகிக்கவில்லை யென்பது லீக் தீர்மானத்திலுள்ள முதல் புகார் ஆகும். இதே பல்லவியைத்தான் முன்னொரு நாள் சர்ச்சில் துரையும் பார்லிமெண்டில் பாடினார். அது எவ்வளவு அபத்தமென்பதை அரசியல் நிர்ணய மகா சபைத் தலைவரான பாபு ராஜேந்திரப் பிரசாத் புள்ளி விவரங்களுடன் எடுத்துக் காட்டினார். அவ்விதம் எடுத்துக் காட்டியும் கூட லீக் தலைவர்கள் சர்ச்சிலின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி அதே அபத்தப் பல்லவியைப் பாடியிருப்பது, முழுப் பூசனிக்காயைச் சோற்றில் மறைக்கும் விந்தையாகவே இருக்கிறது.

* * *

இந்தத் தடவை ஜனாப் ஜின்னாவின் ஆத்திரம் அளவு கடந்து போயிருக்கிறது. அந்த ஆத்திரத்தில் அவர் அரசியல் நிர்ணய மகாசபையையே கலைத்துவிடும்படி பிரிட்டிஷாருக்கு ஓர் அரிய பெரிய அற்புத யோசனையை அள்ளி வீசியிருக்கிறார்.

எப்போதுமே முஸ்லிம் லீக்கிடம் பரம அபிமானமும் அநுதாபமும் காட்டும் பழுத்த கன்சர்வேடிவ் பத்திரிகை லண்டன் "டைம்ஸ்". அது கூட ஜின்னாவின் மேற்படி கோரிக்கை அக்கிரமமானதென்றும், வகுப்புவாதச் சேற்றிலிருந்து எழுந்து வர அவரால் முடியவில்லை யென்றும், முன்னர் ஜின்னா விடுத்த "நேரடி நடவடிக்கை" அறிக்கையைப் போல் இப்போது லீக் செய்துள்ள தீர்மானமும் மோசமானதென்றும் பட்டவர்த்தனமாகக் கூறி யிருக்கிறது. இப்படி "டைம்ஸ்" பத்திரிகையே கூறுமானால் லீக்கின் தீர்மானத்தைக் குறித்து நாம் அதிகம் சொல்வானேன்?

பிகாரிலும், இதர மாகாணங்களிலும் முஸ்லிம்கள் பட்டுவரும் "சொல்லொணாக் கஷ்டங்கள்" அடங்கிய ஜாபிதா ஒன்றையும் லீக்கர்கள் வெளியிட்டிருக்கிறார்கள்.

அவர்கள் அந்த ஜாபிதாவில் சென்னையைக்கூடச் சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள்!

இந்தியாவிலேயே ஹிந்துக்களும், முஸ்லிம்களும் தொன்று தொட்டு சகோதர பாவத்துடன் ஒற்றுமையாக வாழ்ந்து வரும் ஒரு மாகாணம் இருக்கிறதென்றால், அது சென்னைதான். இது எல்லோராலும் ஒப்புக்கொள்ளப் பட்ட விஷயம். அப்படி யிருக்க, சென்னையைக்கூட லீக்கர்கள் ஈவிரக்க மின்றியும் தயவு தாட்சண்ய மின்றியும் அந்த ஜாபிதாவில் சேர்த்துக் கொண்டிருப்பதை எப்படிவர்ணிப்பது?

* * *

எதற்கும் ஓர் எல்லையுண்டு. ஆனால் லீக்கின் பிடிவாதத்துக்கு எல்லையே இல்லை யென்பது இப்போது நிதர்சனமாகிவிட்டது.

லீக்குக்கு காங்கிரஸ் எவ்வளவு விட்டுக் கொடுக்க முடியுமோ அவ்வளவு தூரம் விட்டுக் கொடுத்து விட்டது. பிரிட்டிஷாரும் லீக்கர்களை எவ்வளவு திருப்தி செய்ய முடியுமோ அவ்வளவு தூரம் திருப்தி செய்து விட்டனர். அப்படி யிருந்தும் லீக் தன் பொறுப்பை உணரவில்லை.

இந் நிலைமையில் வைஸ்ராய் வேவலின் கடமை யென்ன? ஒன்று லீக் தன் தவறை யுணர்ந்து வழிக்கு வரும்படி செய்ய வேண்டும். இல்லாவிட்டால், லீக்கின் முட்டுக் கட்டை வேலைக்கு முற்றுப் புள்ளி வைத்து விட்டு, இடைக்கால சர்க்காரில் அவர்களுக்கு இடமில்லை யென்பதையும் அப்பட்ட மாக்கிவிடவேண்டும்.

வைஸ்ராய் வேவலும் பிரிட்டிஷ் சர்க்காரும் அவ்வாறு செய்து இப்போதாவது தங்களுடைய அந்தரங்க சுத்தியைக் காட்டப் போகின்றார்களா அல்லது விஷயத்தைக் குழப்பி மீண்டும் விபரீத வியாக்கியானம் செய்யப் போகின்றார்களா?

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமே கிடுகிடுக்கும்படியான மகத்தான ஒரு போராட்டம் இந்தியாவில் ஏற்படுவதோ, அல்லது பிரிட்டனுக்கும் இந்தியாவுக்கும் நட்பு நாசமாகாமல் பாதுகாக்கப் படுவதோ, இப்போது பிரிட்டன் செய்யப்போகும் முடிவையே பொறுத்திருக்கிறது.

அக்கப் போர்

“ சக்கைப்போடு ”

“இப்போதுள்ள சென்னைச் சட்ட சபையை அடியோடு கலைத்தால் ஒழியச் சென்னை மாகாணத்துக்குக் கதிமோட்சமில்லை” என்று ஸ்ரீ ஸாமி வேங்கடாசலம் செட்டியார் சொல்லுகிறார்.

செட்டியாரின் யோசனையை நிறைவேற்றி வைப்பது தற்சமயம் அவ்வளவு கஷ்டம் ஒன்றுமில்லை. பழைய போலீஸ் குண்டாந் தடிகளும் புதிய பாதுகாப்புச் சட்டமும் தயாராயிருக்கின்றன! அவசியம் அடியோடு கலைக்கலாம்!

★

“பிப்ரவரி 5ட மாலையில் பிரதம மந்திரியின் தலைமையில் கூடிய மந்திரி சபைக் கூட்டம் ஐந்தே ஐந்து நிமிஷத்துக்குள் கலைந்து விட்டது” என்று பத்திரிகைச் செய்தி வெளியாகியிருக்கிறது.

நல்ல வேளையாக, மந்திரி சபை அடியோடு கலைக்கப்படவில்லை என்று அறிந்து சென்னை மாகாணம் ஒரு நெடிய பெருமூச்சு விடுமென்று நம்புகிறோம்.

★

“ஜனாப் ஜின்னா கராச்சியில் மறுபடியும் பஸ்ஸைப் பிடிக்காமல் தவற விட்டு விட்டார்!” என்று பஞ்சாப் காங்கிரஸ் தலைவர் டாக்டர் கிச்லு குறை கூறுகிறார்.

அதனால் பாதகமில்லை என்று ஜனாப் ஜின்னாவுக்குத் தைரியம் கூறுவதுடன், அவரைச் சென்னைக்கு விஜயம் செய்யும்படியாகவும் அழைக்கிறோம். இங்கே, காங்கிரஸ் சர்க்கார் மார்ச் மாதக் கடைசிக்குள் 30 பஸ் புதிதாக விடப் போகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்!

★

நமது பள்ளிக்கூடங்களில் இப்போதுள்ள பாட திட்டங்களைத் திருத்தி அமைக்க வேண்டுமென்பதாகச் சிலர் கிளர்ச்சி செய்து வருகிறார்கள் அல்லவா?

ரிவினியூ மந்திரி கனம் காந்த மேற்படி கிளர்ச்சியைப் பலமாக ஆதரிப்பதாகத் தெரியவருகிறது. எல்லாப் புத்தகங்களிலும் ஒரு புதிய பாடத்தைக் கட்டாயமாகச் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று அவர் அபிப்பிராயப்படுகிறாராம்.

“பிரகாசம் சர்க்கார் போடும் புதிய வரிகளைத் தயங்காமல் கொடுக்க வேண்டும்” என்பதுதான் அந்தப் புதிய பாடம்!

★

கோம்பையில், பன்னிரண்டு வயதுச் சிறுவன்மேல் பாய்ந்த ஒரு சிறுத்தைப் புலியை ஒரு வேட்டை நாயும் இரண்டு நாடார்களுமாகச் சேர்ந்து கொன்று தீர்த்து விட்டார்களாம்!

பிறகு, செத்த புலிக்குச் சப்பரம் கட்டி ஊர்வலம் விட்டார்களாம்!

மனிதர்களாயிருந்தாலும் புலியாயிருந்தாலும் செத்துப் போனவர்களுக்குத்தான் இது காலம் என்று தோன்றுகிறது.

★

பிரான்ஸ் தேசத்தின் புதிய பிரதம மந்திரியின் பெயர் ராமடய்யர் என்று கேள்விப்பட்டதும், “நம்மட ராஜ்யம் பாரிஸ் வரையில் போய்விட்டதா? ஒன்னும் கிளாஸாப் போச்சு!” என்று ஒரு பாலக்காட்டு நண்பர் சந்தோஷப் பட்டாராம்.

ஆனால் ஆந்திர சகோதருடு ஒருவர் ரொம்ப எரிச்சலுடன், “பிரஞ்சுவாடு மூளையைச் சூடண்டி! மனவாடுவை விட்டுவிட்டு அரவவாடுவைப் பிரதம மந்திரி சேசினாரு! பிரான்ஸ் தேசமுலோகூட ஆந்திர மாகாண மகா சாம்ராஜ்யமுனுகு அஜிடேட் சேசனுமண்டி!” என்றாராம்.

★

“ தென்னிந்தியாவிலிருந்து
எகிப்து கடன் வாங்கியது ”

என்ற தலைப்பின் கீழ், செத்துப்போனவர்களின் உடலைப் பதனப்படுத்திப் புதைத்து வைக்கும் வழக்கம் ஐயாயிரம் வருஷங்களுக்கு முன்னால் தென்னிந்தியாவிலிருந்து எகிப்துக்குப் போயிற்று என்னும் சரித்திர

ஆராய்ச்சியாளரின் முடிவு ஒரு பத்திரிகையில் வெளியாகியிருக்கிறது.

நல்லது; பிரிட்டிஷாரிடமிருந்து ஸ்டர்லிங் கடனை இந்தியா வசூல் செய்த பிறகு, எகிப்திலிருந்து மேற்படி புதையல் 'கடனை'யும் திருப்பி வாங்க முயற்சிக்கலாம்!

★

"எல்லா வகைப்பட்ட சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கும் சம்பள விகிதம் உயர்த்திய சென்னைப் பிரகாசம் மந்திரி சபையார், அரசாங்க நிர்வாகத்துக்கே அஸ்திவாரமான கிராம உத்தியோகஸ்தர்களை மட்டும் கண்ணெடுத்துப் பார்க்கவில்லையே?" என்று ஒரு கிராம நிருபர் வருத்தப்படுகிறார்.

எவ்வளவுதான் கண்ணெடுத்துப் பார்த்தாலும் மேலேயுள்ள கட்டிடந்தானே புலப்படும்? பூமிக்குள்ளே புதைந்து கிடக்கும் அஸ்திவாரத்தைக் கண்ணால் எப்படிப் பார்க்க முடியும்?

★

புது டில்லியில் தேசிய சர்க்கார் ஏற்பட்ட பிறகு 1100 உத்தியோகஸ்தர்கள் மீது லஞ்சக் கேஸ் நடந்து, அவர்களில் 700 பேர்மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ளப் பட்டதாம். இவர்களில் 30 பேர் கெஜட்டட் ஆபீஸர்களாம். இது வரையில், 5 கோடி 65 லட்சம் ரூபாய் சம்பந்தமான ஊழல்கள் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றனவாம்.

இதையெல்லாம் இந்திய சட்டசபையில் தெரியப்படுத்தி லஞ்ச ஊழல்களை இன்னும் கடுமையான நடவடிக்கைகளின் மூலம் ஒழிப்பதற்காகச் சர்தார் பட்டேல் ஒரு மசோதா கொண்டு வந்திருக்கிறார்.

சென்னை மாகாணத்தில் காங்கிரஸ் சர்க்கார் ஏற்பட்ட பிறகு எத்தனை உத்தியோகஸ்தர்கள் மீது லஞ்ச நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று நேயர்கள் அறிய விரும்பலாம். நமக்குத் தெரிந்த வரையில் லஞ்சக் கேஸைக் கண்டு பிடிக்க முயன்ற சில உத்தியோகஸ்தர்கள் வேலையிலிருந்து தள்ளப்பட்டிருக்கிறார்கள்!

★

லஞ்ச ஒழிப்பு சம்பந்தமாகச் சர்தார் பட்டேல் வெளியிட்ட அறிக்கை இன்னொரு விஷயத்தை ஞாபகப் படுத்துகிறது.

லஞ்ச ஊழல் அதிகமாக ஏற்படக் கூடிய இலாகாக்களில் 'இண்டஸ்ட்ரீஸ் அண்டு

ஒரு கேள்வி!

நேயர்களை ஒரு கேள்வி கேட்க விரும்புகிறோம். உங்களில் பலர் எவ்வளவோ பணம் சம்பாதிக்கிறீர்கள்; செலவழிக்கிறீர்கள். ஆனால் உங்களுக்கு என்று சொந்தமாக எவ்வளவு பணம் சேர்த்து வைத்திருக்கிறீர்கள்?

பாங்கிலே போட்டிருப்பதையோ, 'சர்க்கார் கடன் பத்திரங்கள், கம்பெனி ஷேர்கள் முதலியவற்றில் போட்டிருப்பதையோ நாம் கேட்கவில்லை. அவையெல்லாம் உங்களுக்கு என்று சேர்த்து வைத்தது ஆகாது.

தேச நன்மைக்கும் பொது நன்மைக்கும் உரிய தர்ம கைங்கரியங்களுக்கு எந்தப் பணம் கொடுபட்டிருக்கிறதோ, அதுதான் நமக்கு என்று சேர்த்து வைத்துக் கொண்டதாகும்.

அந்த முறையில் பணம் சேர்த்து வைத்துக் கொள்ள ஒரு நல்ல சந்தர்ப்பம் இன்னும் ஒரு வாரத்துக்கு நீடித்திருக்கிறது. தமிழ் நாட்டின் சிறந்த தேசியக் கல்வி ஸ்தாபனமாகிய நேஷனல் காலேஜைத்தான் குறிப்பிடுகிறோம். மேற்படி காலேஜின் அறுபதாண்டு பூர்த்திக் கொண்டாட்டம் நாளது பிப்ரவரி மாதம் 14, 15, 16உ களில் நடைபெறப் போகிறது. எனவே, வைரவிழா நிதிக்குப் பணம் அனுப்ப விரும்பும் பழைய மாணவர்களுக்கும் மற்றும் தர்ம சிந்தனையுள்ள கனதனவான்களுக்கும் இன்னும் ஒரு வாரம் தவணையிருக்கிறது. அதற்குள்ளே அவரவர்களுடைய சக்தியானுசாரம் பணம் அனுப்பி வைர விழா நிதியைப் பெருக்கும்படி கோருகிறோம். அப்படி அனுப்பும் பணம் இம்பீரியல் பாங்கியில் போட்ட பணத்தைவிட அதிகப் பிரயோஜனமாயிருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

வைரவிழாவை விமரிசையாகக் கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. முதல் நாள் 14உ மாணவர்களின் விளையாட்டும், பரிசு வழங்குதலும் நடைபெறும். 15உ காலையில் ஸ்ரீ என். எஸ். அருணாசலம் ஐ. ஸி. எஸ். தலைமையில் பழைய மாணவர் கூட்டம்; அன்று மாலை ஸ்ரீ வி. சாரநாத ஐயங்கார் உருவப் படமும், ஸ்ரீ ஜி. சேஷய்யங்கார் முதலிய மூன்று ஸ்தாபகர்களின் உருவப் படங்களும் திறந்து வைக்கப்பட்ட பின்னர், கதம்ப நிகழ்ச்சி நடைபெறும். 16உ ஞாயிற்றுக்கிழமை காலையில் கல்வி மந்திரி ஸ்ரீ டி. எஸ். அவினாசிலிங்கம் செட்டியார் வைர விழாக் கட்டிடத்துக்கு அஸ்திவாரம் நாட்டுகிறார். பிரின்ஸ்பால் சாரநாதன் ஞாபகார்த்த மண்டபத்துக்கு ஸ்ரீ டி. வி. சுந்தரமய்யங்கார் அடிப்படை போடுகிறார்.

மாலை 6 மணிக்கு வைஸ் சான்ஸலர் டாக்டர் ஸர். லக்ஷ்மணசாமி முதலியார் தலைமையில் ஸச்சிவோத்தம ஸர் ஸி. பி. ராமஸ்வாமி ஐயர் வைர விழாப் பிரசங்கம் நிகழ்த்துகிறார்.

வைர விழா ஏக தடபுடலாகத்தான் நடைபெறும்போலிருக்கிறது. மேற்படி விழாவுக்கு விஜயம் செய்ய விரும்பும் பழைய மாணவர்களும் மற்றும் பிரமுகர்களும் இடவசதி உணவு வசதிகள் தேவையானால் பிரின்ஸ்பால் ஸ்ரீ ஏ. ராமய்யர் அவர்களுக்கு முன்னதாக எழுதும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். வைர விழாவுக்கு விஜயம் செய்ய முடியாதவர்கள் தங்கள் நன்கொடையையாவது அவசியம் அனுப்பிவிடும்படி கோரப்படுகிறார்கள்.

ஸப்ளேஸ்' இலாகா ஒன்று. ராஜாஜி முதலில் மேற்படி இலாகாவை ஒப்புக்கொண்ட சில தினங்களுக்குள் நூற்று லட்ச ரூபாய் லஞ்சக் கேஸ் ஒன்றைக் கண்டு பிடித்து, கராச்சியில் கப்பல் ஏறத் தயாராயிருந்த வெள்ளைக்கார ஐ. ஸி. எஸ். துரையின் பிரயாணத்தையும் தடை செய்தார் என்ற செய்தி பத்திரிகைகளில் வெளியாகியிருந்தது.

ராஜாஜியின் மோட்டார் வண்டியில் குண்டு பாய்ந்ததற்குக் காரணம்கூட அவருடைய தீவிர லஞ்ச ஒழிப்பு நடவடிக்கையாயிருக்கலாம் என்று சிலர் ஊகித்தார்கள்.

ராஜாஜி சென்னை மாகாணத்தை விட்டுப் புது டில்லிக்குப் போனது எவ்வளவோ நல்லதாய்ப் போயிற்றல்லவா? இங்கே அந்த மனிதர் இருந்திருந்தால் வீணாக நம்முடைய மாகாணத்துக்குக் கெட்ட பெயர்தானே வந்திருக்கும்? லஞ்சம், மிஞ்சம் ஏதோ நடந்தாலும் நடந்து கொண்டு போகட்டும்! அதைக் கண்டு பிடித்துப் பகிரங்கப்படுத்திச் சென்னை மாகாணத்துக்கே கெட்ட பெயர் உண்டாக்குவதில் என்ன பிரயோஜனம்?

ஆகவே, "ராஜாஜி வாழ்க! அவர் டில்லியிலேயே வாழ்க!" என்று சிலர் பிரார்த்தனை செய்வது நியாயந்தானே?

★

"பீஹாரில் பத்தாயிரம் ஹிந்துக்கள் ஸிக் மதத்தைச் சேர்ந்தார்கள்" என்று ஒரு செய்தி கூறுகிறது.

இதைப் படித்த ஒரு சிரத்தா ஆஸ்பத்திரிவாஸி, "மேற்படி புது மதத்தில் சேர்வதற்கு என்ன 'சிக்' இருந்தாலும் பரவாயில்லையா? அல்லது குறிப்பிட்ட 'சிக்'தான் இருக்க வேணுமா?" என்று கேட்கிறார்.

● ✶ ●

ஆண்டிக்கு ஆபத்து!

அரகர சிவசிவ சம்போ! — இந்த
அரசாங்கக் காரியம் எல்லாமே வம்போ?

1. கப்பரை கைக்கையில் ஏந்தி — சாமி
காவி முழுத்துண்டை இடையிலே சுற்றி
பற்பல சிந்துகள் பாடும் — நம்மைப்
பார்த்தால் பரதேசி ஆண்டி என்பாங்க!

2. இப்பவோ எல்லாரும் ஆண்டி — சாமி
இருபது கஜம்துணி கதர்வரும் வரையில்
ஒப்பில்லா மந்திரிக் கூட்டம் — இங்கே
ஓடிவிளையாடும் அதிகார நாட்டம்!

3. பன்னெண்டு ஒன்பது ஆச்சு — இதைப்
பார்த்துச் சரியென்று சும்மா யிருந்தோம்
பின்னர் கூடும் ஐந்து ஆச்சு — இது
ஆண்டிகள் கூட்டத்திற் கவமானம் அன்றோ?


4. பஞ்சத்துப் பங்கீடு என்று — ஐயோ!
பதின்மூவர் செய்ததோர் சதிகாரச் சூழ்ச்சி
கொஞ்சந்தான் யோசித்துப் பார்த்தால் — நம்ம
கூட்டத்திற் கேவரும் ஆபத்துத் தெரியும்!

5. கட்டத்து விபோதா தென்று — சாமி
கண்டபே ரெல்லாரும் ஆண்டிகளானால்
மட்டமாய்ப் போகும்நம் வாழ்வு — உன்ன
மதிப்புமரியாதை சகலமும் தாழும்!


6. பஞ்சத்திற் காண்டிகளானால் — சாமி
பரம்பரை ஆண்டிக்கு வகைஎன்ன கூறும்!
வஞ்சனையாய்ச் செய்த சட்டம் — இதை
வகையாய் எதிர்த்திடப் போடணும் திட்டம்! (அரகர)

—நாட்டுக் கண்ணன்

அரசியல் நிர்ணய சபை......




இரண்டாவது கூட்டத்தில்......



கார்ட்டூனிஸ்ட் உம்மன் கண்ட.....



சில அபூர்வக் காட்சிகள்



வானசஞ்சாரம்

இசைத்தேனீ

ஜனவரி 21ல் திருச்சியில் நடந்த சாத்தூர் சுப்பிரமணியத்தின் கச்சேரி சிறப்பாய் விளங்கியது. அவரது சங்கீதம் நாளுக்கு நாள் மெருகேறி சோபை அடைந்து வருகிறது என்பதற்கு அன்றையக் கச்சேரியே அத்தாட்சி. காம்போதி, மோஹனம் ராகங்களில் தம் முழுத் திறமையையும் காட்டினார். இவை தவிர ஹிந்தோளம், வராளி ராகங்களும் உருப்படிகளும் சிறப்பாயிருந்தன. 'ஸாரஸதள நேத்ர' என்ற பல்லவி ராகபாவம் ததும்பி யிருந்தது.

23ல் திருச்சியிலிருந்து கேட்ட மன்னார்குடி கே. சாவித்திரி அம்மாளின் கோட்டு வாத்யக் கச்சேரியில் கரஹரப்ரியா, அமிர்தகல்யாணி, பாகேச்வரி ராகங்களின் ஆலாபனைகள் வசீகரமாயிருந்தன.

நமது வித்வான்களில் எஸ். சோமசுந்தரத்தின் பாட்டு ஒரு தனி ரகம். அசாத்ய பிர்க்காப் பொழிவு. ஆனால் தொய்வில்லாத தெளிவு. அதன் நடுவே சுகமான கமக இழைப்புகள். எல்லாம் சேர்ந்து கேட்போரை உற்சாகத்தில் ஆழ்த்திப் பிரமிக்க வைத்து விடுகிறது. 25ல் திருச்சியில் நடந்த அவரது கச்சேரியில், நாட்டக்குறிஞ்சி ராகத்தில் சௌக்ய ரூபமே இல்லாமல் பிர்க்காவை அள்ளிப் பொழிந்தார். ஹிந்தோளம் விரிவாயும் அழகு வடிவமாயும் இலங்கியது.

22ல் திருச்சியிலிருந்து கேட்ட வி. பி. ஞானசுந்தரத்தின் பாட்டு குறிப்பிடத் தக்கது. மாயாமாளவ கௌளை, ஆபோகி, சக்ரவாகம் ராகங்கள் தரமாயிருந்தன.

23ல் திருச்சியில் கே. ராமசாமி ரஞ்சக சாரீரத்தில் நல்ல பாவத்துடன் வழங்கிய தன்யாசி சுகமாயிருந்தது.

24ல் சென்னையிலிருந்து கேட்ட மன்னார்குடி நாகநாதய்யரின் கானம் குறிப்பிடத் தக்கதாயிருந்தது. பைரவி, சௌராஷ்டிர ராகங்களை வண்ணமாய்க் கையாண்டார்.

அன்று மாலை திருச்சியிலிருந்து திருவாரூர் எஸ். ராஜரத்தினம் பிள்ளை வாசித்த நாதஸ்வரம் விருவிருப்பாயிருந்தது. ஆபோகி, பூர்வி கல்யாணி, சக்ரவாகம் இவைகளோடு [illegible] என்ற அபூர்வ ராகம் கவர்ச்சி கொடுத்தது.

27ல் சென்னை எஸ். நரஸிம்மலுவின் கானம் களைகட்டியிருந்தது. தோடி, தேவமனோஹரி ராகங்களும் உருப்படிகளும் தரமாயிருந்தன. அன்று அதே நிலையத்தில் பாடிய டி. ஏ. வெங்கடராமய்யரின் தர்பார் ராகம் கவனத்தை இழுத்தது.

திருச்சியில் பாரசாலை பி. பொன்னம்மாளின் கானம் இனிமையாய்க் காதை நிரப்பியது. கல்யாணி, ஸ்ரீரஞ்சனி, சங்கராபரண ராகங்களும் உருப்படிகளும் தேர்ச்சியைக் காட்டின.

• • •

ஜனவரி 28ல் திருச்சியில் வேணுகானக் கச்சேரி செய்த பழம்பெரும் வித்வான் பல்லடம் சஞ்சீவிராவுக்கு வயது அதிகமாய் விட்டாலும், அவரது வாத்யத்தின் அழகும் பெருமையும் குறையாது நிலைத்து நிற்பது ஆச்சரியமே. அவரது வாசிப்பில் நாத புஷ்டியும் ராக வடிவங்களின் எழிலும் குறிப்பிடத் தக்கவை. அன்று அவர் வாசித்த பல ராகங்களில் பிரதாபவராளி என்ற அபூர்வ ராகம் அபூர்வமாக அமைந்தது. பல்லவி ராகமாகிய ஆனந்த பைரவியில் பல்லடம் ராவ் தமது ஞானப் பெருக்கையும் முதிர்ந்த அனுபவத்தையும் நன்கு விளக்கினார்.

29ல் சென்னையில் செம்மை வைத்யநாத பாகவதர் பைரவியை ராகம் தானம் பல்லவிக்காக எடுத்துக்கொண்டு, அவருக்கு இயல்பான நாதப் பொழிவுடனும் உற்சாகத்துடனும் அமைத்து விட்டார். இப்போதெல்லாம் பிர்க்காப் பொழிவைக் குறைத்துக் கொண்டு இழுத்துப் பாடும் வழக்கத்தில் இறங்கி யிருக்கிறார் என்று தெரிய வந்தது.

அன்று திருச்சியிலிருந்து கேட்ட டி. எம். சௌந்தரராஜனது கானம் குறிப்பிடத் தக்கது. அவரது கரஹரப்ரியா, ஸஹானா ராகங்களும் உருப்படிகளும் தரமாயிருந்தன.

30ல் திருச்சியில் சிதம்பரம் பி. எஸ். மணி நய சாரீரத்தில் பிர்க்காப் பொழிவுடன் தோடி, கல்யாணி ராகங்களைச் சரளமாய் வழங்கினார்.

பிப்ரவரி 1ல் சென்னையில் நடந்த மைசூர் டி. சௌடய்யாவின் வயலின் கச்சேரி சென்ற வாரத்திய மற்றொரு பெரிய நிகழ்ச்சி. அன்று அவர் வாசித்த பல ராகங்களில், ஒவ்வொன்றும் தனியழகுடன் இலங்கியது. சித்த ரஞ்சனி, விஜயஸ்ரீ முதலிய அசாதாரண ராகங்களை வெகு சரளமாய்க் கையாண்டார். பல்லவி ராகமாம் ஷண்முகப்ரியாவில் அசாத்ய வேலைப்பாடுகளைக் காட்டியதுடன் மேல் ஸ்தாயியில் அபூர்வ சஞ்சாரங்களைக் கையாண்டு பிரமிக்க வைத்தார்.


சும்மாப் போடப்பா!



"என்னப்பா இது? அந்த அம்மா இந்தப் பையனுக்குத் தாயாச்சேனே? அப்படியானும் ஒரு பத்து வயதாவது அதிகமாகத் தோன்றும்படி படத்தைப் போடப்பா!"

"அவுங்க இந்தப் பையனுக்கு அம்மா இல்லிங்க; சம்சாரங்க!"

"அப்படின்னா இன்னும் பத்து வயது குறைத்துப் போடப்பா!"



சோலைமலை இளவரசி

கல்கி

7. மணியக்காரர் மகள்

குமாரலிங்கம் கண்ணை மூடிக் கொண்ட பிறகு அவனுடைய செவிகள் மிகவும் கூர்மையாயின. குயில்கள் 'குக்கூ' 'குக்கூ' என்று கூவும் சத்தமும், அணில்கள் 'கிச்' 'கிச்' என்று இசைக்கும் சத்தமும், வேறு பலவகைப் பறவைகள் 'கினக்' 'கினக்' என்றும், 'கிளிங்' 'கிளிங்' என்றும் 'கிறீச்' 'கிறீச்' என்றும் கத்தும் சத்தமும் கேட்டன. இவ்வளவு சத்தங்களுக்கு மத்தியில் 'கலின்' 'கலீன்' என்று கேட்ட மெட்டிகளின் சத்தத்திலேதான் அவனுடைய கவனம் நின்றது. சீக்கிரத்தில் அந்தச் சத்தம் நின்று விட்டது. எவ்வளவு காது கொடுத்துக் கவனமாகக் கேட்டும் கேட்கவில்லை. அந்தப் பெண் போய் விட்டாளா? — அடாடா! — போயே போய் விட்டாளா? — அவள் தலையிலே இருந்த கூடையில் மோரோ, தயிரோ, அல்லது சோறோ இருந்திருக்க வேண்டும். வயிற்றுப் பசி கொல்லுகிறதே? வந்தது வரட்டும் என்று அவளைப் பார்த்துப் பேசாமல் போனோமே? — நிஜமாகவே போய் விட்டாளா? அல்லது, ஒரு வேளை.....

குமாரலிங்கம் இலேசாகக் கண்ணிமைகளைச் சிறிது திறந்து பார்த்தான். அந்தப் பெண் போகவில்லை, தன் எதிரிலே அருகில் நின்றுகொண்டிருக்கிறாள் என்று தெரிந்துகொண்டான். உடனே தன்னை மீறி வந்த சங்கோசத்தினால் மீண்டும் கண்களை இறுக மூடிக் கொண்டான்.

குன்றிலிருந்து குதித்தோடும் அருவியின் சலசல சத்தத்தைப் போன்ற சிரிப்பின் ஒலி கேட்டது.

அந்த ஒலி செவியில் விழுந்ததும், ஸ்விட்ச்சை அமுக்கியதும் இயங்கும் மின்சார இயந்திரத்தைப் போல் குமாரலிங்கம் பளிச்சென்று எழுந்து உட்கார்ந்தான். தன் முன்னால் நின்ற பெண்ணின் முகத்தை ஏறிட்டு உற்றுப் பார்த்தான். ஆச்சரியம் எல்லை மீறியது. அவள்தான்; சந்தேகமில்லை! சோலைமலை இளவரசியேதான். உடுத்தியிருந்த உடையிலும் அணிந்திருந்த ஆபரணங்களிலுந்தான் வித்தியாசமே தவிர, முகத்திலும் தோற்றத்திலும் யாதொரு வேற்றுமையும் இல்லை.

குமாரலிங்கத்தின் தலை சுழன்றது.

நல்ல வேளையாக, அந்தப் பெண் அடுத்தாற்போல் சொன்ன வார்த்தை அவன் மயங்கிக் கீழே விழாமல் தடுத்தது.

"இந்த மண்டபத்தில் உச்சி வேளையில் படுத்துத் தூங்கக் கூடாது, ஐயா! இங்கே மோகினிப் பிசாசு உலாவுது என்று சொல்கிறாங்க!"

இதைக் கேட்டதும் குமாரலிங்கம் குபீர் என்று சிரித்தான். ஆனால் சிரிப்பின் சத்தம் அவ்வளவு கணீரென்று கேட்கவில்லை. அதன் காரணத்தை அந்தப் பெண்ணே கூறினாள்.

“பாவம்! சிரிக்கக்கூடச் சக்தி இல்லை. வயிற்றுக்குச் சாப்பிட்டு ஒரு மாதம் ஆனாற்போலேயிருக்கு, ஆளைப் பார்த்தால்! உடம்புக்கு ஏதாவது அசௌக்கியமா, ஐயா!” என்று அவள் கூறியது குமாரலிங்கத்தின் செவியில் இன்பகீதமாகப் பாய்ந்தது.

“அதெல்லாம் எனக்கு உடம்பு அசௌக்யம் ஒன்றுமில்லை. நீ யார், அம்மா?” என்று குமாரலிங்கம் கேட்ட வார்த்தை ஈன ஸ்வரத்திலே தான் வெளி வந்தது.

“நான் இந்த ஊர் மணியக்காரர் மகள். உனக்கு உடம்பு அசௌக்யம் இல்லாவிட்டால், பசியாய்த்தான் இருக்கவேணும். அப்படி நீ சுருண்டு படுத்துக்கிட்டிருப்பதைப் பார்த்த போதே தெரிந்தது. சோறு கொஞ்சம் மிச்சம் இருக்கு; சாப்பிடுகிறாயா, ஐயா!”

குமாரலிங்கத்தின் வயிறு “கொண்டு வா! கொண்டு வா!” என்று முறையிட்டது. ஆனால் சுய கௌரவ உணர்ச்சி குறுக்கே வந்து நின்றது.

“அதென்ன அப்படிக் கேட்டாய்? என்னைப் பார்த்தால் அவ்வளவு கேவலமாயிருக்கிறதா? பிச்சைக்காரன் மாதிரி தோன்றுகிறதா?” என்றான் குமாரலிங்கம்.

“பிச்சைக்காரன் என்று யார் சொன்னாங்க? பார்த்தால் மஹாராஜன் வீட்டுப் பிள்ளை மாதிரிதான் இருக்கு. ஆனால், எப்பேர்ப்பட்ட பிரபுக்களுக்கும் சிலசமயம் கஷ்டம் வருகிறது சகஜந்தானே? அதிலும் நல்லவங்களுக்குத்தான் உலகத்திலே கஷ்டம் அதிகமாய் வருகிறது. இராமர், சீதை, அரிச்சந்திரன், சந்திரமதி, தர்மபுத்திரர் — இவர்கள் எல்லாரும் எவ்வளவோ கஷ்டப்படவில்லையா?”

இந்தப் பட்டிக்காட்டுப் பெண் விவாதத்தில் எவ்வளவு கெட்டிக்காரியாயிருக்கிறாள் என்று குமாரலிங்கம் மனதிற்குள்ளே வியந்தான். எனினும், விவாதத்தில் தோற்க மனமில்லாமல், “அவர்களையெல்லாம் போல நான் நல்லவனுமில்லை; எனக்குக் கஷ்டம் ஒன்றும் வந்து விடவும் இல்லை” என்றான்.

“அப்படியென்றால் ரொம்ப சந்தோசம்; நான் போய் வாரேன்! உன்னோடு வெறும் பேச்சுப் பேசிக்கிட்டிருக்க எனக்கு நேரம் இல்லை. ஆயான் கோபித்துக் கொள்வான்” என்று சொல்லி விட்டு அந்தப் பெண் மேலே போகத் தொடங்கினாள். குமாரலிங்கத்துக்குத் தன் பிராணனே தன்னை விட்டுப் போவது போலிருந்தது. அவள் பத்து அடி போவதற்குள், “அம்மா! அம்மா! இங்கே வா! பசி காதை அடைக்கிறது. கொஞ்சம் சோறு போட்டு விட்டுப் போ!” என்றான்.

போகும்போது கொஞ்சம் சிடுசிடுப்போடு போனவள், மலர்ந்த முகத்தோடு திரும்பி வந்தாள்.

“இதற்கு என்னத்திற்கு இவ்வளவு வறட்டு ஜம்பம்? ஆளைப் பார்த்தால் தான் தெரிகிறதே, மூன்று நாளாய்ப் பட்டினி என்று? இந்தா!” என்று சொல்லி, ஒரு மலை வாழை இலையை எடுத்துக் கொடுத்தாள்.

“ஜம்பம் ஒன்றும் இல்லை, அம்மா! நீ யாரோ, என்னமோ என்று கொஞ்சம் யோசித்தேன்.”



"இதை முதலிலேயே கேட்டிருக்கக் கூடாதா? நாங்கள் நல்ல சாதிதான். முக்குலத்தோர் குலம். எங்கள் ஐயா பெயர் சிங்கார பாண்டியத் தேவர்."

"சாதியைப் பற்றி நான் கேட்கவில்லை. நான் தேசத் தொண்டன். முக்குலத்தோரானாலும் எக்குலத்தோரானாலும் எனக்கு ஒன்றுதான்."

இலையில் சோற்றைப் படைத்துக் கொண்டே மணியக்காரர் மகள், "தேசத் தொண்டன் என்றால் என்ன? அது ஒரு சாதியா?" என்று கேட்டாள்.

குமாரலிங்கம் அப்போது தன் மனதிற்குள், "அடாடா! நம்முடைய பெண் குலத்தை நாம் எப்படிப் படிப்பில்லாமல் வைத்துக் கொண்டிருக்கிறோம்?" என்று எண்ணிப் பரிதாபப் பட்டான். பிறகு, "தேசத் தொண்டன் என்பது ஒரு சாதியல்ல. தேசத் தொண்டர்களுக்குச் சாதி என்பதே கிடையாது" என்றான்.

"அது எப்படி சாதியே இல்லாமல் இருக்கும்? ஏதாவது ஒரு சாதியில் பிறந்துதானே ஆக வேண்டும்? தேசத் தொண்டர் என்றால் சாதி கெட்டவர்கள் என்று சொல்கிறாயா?"

"ராம ராமா! சாதியே இல்லை என்றால், சாதி எப்படிக் கெடும்? இருக்கட்டும்; 'தேசம்' என்றால் இன்னதென்று உனக்குத் தெரியுமா?"

"தெரியாமல் என்ன? இந்த மலைக்கு அப்பாலே மலையாள தேசம் இருக்கிறது. கொலை, கில பண்றவங்களைத் தேசாந்தரம் அனுப்பறாங்களே!"

"அது போகட்டும்; காந்தி என்று கேட்டிருக்கிறாயா?"

"காந்தி மகாத்துமா என்று சொல்கிறாக! நேரே பார்த்ததில்லை."

"சரி; காங்கிரஸ் மகாசபை என்றால் தெரியுமா?"

"எல்லாம் தெரியும். முன்னே யெல்லாம் காங்கிரஸ் என்று சொல்லி மஞ்சப் பெட்டியிலே வோட்டுப் போடு என்று சொன்னாங்க. இப்போது, காங்கிரஸ்காரனுங்க அங்கே கொள்ளை யடிச்சாங்க, இங்கே கொள்ளை யடிச்சாங்க என்று சொல்லிக்கிறாக!"

"கடவுளே! கடவுளே! காங்கிரஸ்காரர்கள் கொள்ளை யடிக்க மாட்டார்கள், அம்மா! வெள்ளைக்காரர்களாகிய கொள்ளைக்காரர்களை இந்தப் பாரத தேசத்திலிருந்து துரத்துவது தான் காங்கிரஸ் மகாசபையின் நோக்கம். இந்தப் புண்ணிய பூமியில் எத்தனையோ வீரப் பெண்மணிகள் இன்றைக்குச் சுதந்திரக் கொடியை நாட்டக் கிளம்பி யிருக்கிறார்கள்..."

"கொடி போடுகிறவர்கள் போடட்டும். அதெல்லாம் எனக்கு என்னத்திற்கு? எங்க ஐயாவுக்கு என்னமோ இப்போதெல்லாம் காங்கிரஸ்காரங்க என்றால் ரொம்பக் கோவம்......"

"அடாடா! அப்படியா? அவரை மட்டும் நான் நேரில் பார்த்தால்,



உண்மையை எடுத்துச் சொல்லி அவர் மனதை மாற்றி விடுவேன்...''

"எங்க ஐயாவை உனக்குத் தெரியாது. தெரிந்தால் இப்படிப் பேச மாட்டாய். ரொம்பக் கோவக்காரர். 'காங்கிரஸ்காரனுங்க யாராவது இந்த ஊரில் கால் எடுத்து வைக்கட்டும்; காலை ஒடித்து விடுகிறேன்' என்று சொல்லிக் கொண்டிருக்கிறார். நீ காங்கிரஸ் கட்சிக்காரன் என்றால், எங்க அப்பா ஊருக்குத் திரும்பி வாரதுக்குள்ளே போய் விடு!''

இந்த வார்த்தைகள் குமாரலிங்கத்துக்கு அவ்வளவாக ரஸிக்கவில்லை. இன்னதென்று விவரமாகாத ஒரு விதத் திகில் அவன் மனதில் உண்டாயிற்று. எல்லாம் காலையில் கண்ட கனவில் நடந்த மாதிரியே நடக்கிறதே என்ற எண்ணமும் தோன்றியது.

"சரி; அந்தப் பேச்சை விட்டு விடலாம். உன் பெயர் என்ன?''

"என் பெயர் பொன்னம்மா. எதற்காகக் கேட்கிறாய்?''

"இவ்வளவு உபகாரம் எனக்குச் செய்தாயே? உன் பெயரையாவது நான் ஞாபகம் வைத்துக் கொள்ள வேண்டாமா?''

"உபகாரம் செய்கிறவர்களை இந்த நாளில் யார் ஞாபகம் வைத்துக் கொள்ளுகிறார்கள்? அதெல்லாம் வெட்டிப் பேச்சு. காரியம் ஆகவேண்டியிருந்தால் சிநேகிதம், உறவு எல்லாம் கொண்டாடுவார்கள். காரியம் ஆகி விட்டால், நீ யாரோ? நான் யாரோ?''

"அப்படிப்பட்ட மனிதன் அல்ல நான். ஒரு தடவை உதவி செய்தவர்களை ஒரு நாளும் மறக்க மாட்டேன். அதிலும் உன்னை நிச்சயமாக மறக்க மாட்டேன்.—ஆமாம்; மணியக்காரர் மகள் என்கிறாயே? யாருக்குச் சாப்பாடு கொண்டு போனாய்? வேறு யாரும் வேலைக்காரர் இல்லையா?''

"வேலைக்காரர்கள் இருக்கிறார்கள். எல்லாரும் கரும்புத் தோட்டத்தில் வேலை செய்கிறார்கள். கரும்பு வெட்டி இப்போது வெல்லம் காய்ச்சியாகிறது. அப்பா ஊரில் இல்லாததால், ஆயாளும் அண்ணனும் ஆலை அடியில் இருக்கிறார்கள். வெறுமனே வீட்டிலே குந்தி இருப்பானேன் என்று அவர்களுக்குச் சோறு கொண்டுபோய்க் கொடுத்து விட்டு வருகிறேன்.''



"அப்படியானால், நாளைக்கும் இந்த வழி வருவாயா?''

"வந்தாலும் வருவேன்; ஆனால் நாளைக்குக்கூட நீ இங்கேயே இருப்பாயா? உனக்கு வீடு வாசல், வேலை வெட்டி ஒன்றும் இடையாதா?''

"நான் தான் அப்போதே சொன்னேனே, தேசத் தொண்டுதான் எனக்கு வேலை என்று.''

"அதென்னமோ எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. நான் போய் வரு

கிறேன்" என்று சொல்லிவிட்டுப் பொன்னம்மாள் புறப்பட்டாள்.

"நான் கேட்டதற்குப் பதில் சொல்லாமல் போகிறாயே? நாளைக்கும் இந்த மாதிரி ஒரு பிடி சோறு போட்டுவிட்டுப் போனாயானால் தேவலை. இன்னும் இரண்டு மூன்று நாளைக்கு நான் இந்தப் பாழும் கோட்டையிலே இருந்து தீர வேண்டும். சாப்பிட்ட பிறகுதான் களைப்பு இன்னும் அதிகமாய்த் தெரிகிறது. இரண்டு மூன்று நாளைக்கு ஒரு அடிகூட எடுத்துவைக்க முடியாது போலிருக்கிறது......ஊருக்குள் வரலாம் என்று பார்த்தால் உன் தகப்பனார் காங்கிரஸ்காரன் என்றால் காலை ஒடித்து விடுவார் என்கிறாய்."

"அதில் என்னமோ சந்தேகமில்லை. உனக்கு நான் சோறு போட்டதாகத் தெரிந்தால் என்னையே அவர் காளை வாயில் வைத்து விடுவார்!"

"அப்படியானால் நீதான் இரண்டு மூன்று நாளைக்கு எனக்குச் சோறு போட்டுக் காப்பாற்ற வேண்டும்."

"நல்ல காரியம். முதலில் நாளை ஒரு நாளைக்கு என்றாய். அப்புறம் மூன்று நாளைக்கு என்கிறாய். வழிப்போக்கர்களுக்குச் சோறு கொண்டு வந்து படைப்பதுதான் எனக்கு வேலை என்று நினைத்தாயா?"

"சரி! அப்படியென்றால் நான் பட்டினி கிடந்து சாகிறேன். இங்கே பறந்து திரியும் கழுகுகளுக்கு நல்ல இரை கிடைக்கும். இன்றைக்குக்கூட உன்பாட்டுக்குப் பேசாமல் போயிருக்கலாமே! தூங்கினவனை எழுப்பிச் சோறு போட்டிருக்க வேண்டாமே?"

பொன்னம்மாள் கலகல வென்று சிரித்தாள். அவள் சிரித்தபோது குமாரலிங்கத்துக்குக் குன்றும் மரமும் கொடியும் செடியும் சகல ஜீவராசிகளும் கலகல வென்று சிரிப்பது போலத் தோன்றியது. அவனுடைய சோர்வடைந்த முகத்திலும் புன்னகை பூத்தது.

பொன்னம்மாளை முன்னைவிட ஆர்வத்தோடு பார்த்து, "ஏன் சிரிக்கிறாய்?" என்று கேட்டான்.

"தூங்கினவனை எழுப்பியதாகச் சொன்னதற்குத்தான் சிரித்தேன். நிஜமாக நீ தூங்கினாயா?"

"இல்லை; பொய்த் தூக்கந்தான். ஆனால் நான் கண்ணை மூடிக் கொண்டு படுத்திருந்தபோது நீ சிரித்தாயே, அது எதற்காக?"

"நீ எழுந்து உட்கார்ந்து என்னைப் பார்த்ததும் சிரிக்க முடியாமல் சிரித்தாயே, அது எதற்காக?"

"நீ முதலில் சொன்னால் நானும் சொல்கிறேன்."

"நிச்சயமாகச் சொல்வாயா?"

"சத்தியமாய்ச் சொல்கிறேன்."

"நேற்றைக்கு நான் சந்திரஹாஸன் கதை படித்துக் கொண்டிருந்தேன்!"

"ஓஹோ! உனக்குப் படிக்கக்கூடத் தெரியுமா?"

"ஏன் தெரியாது? நாலாவது வகுப்பு வரையில் படித்திருக்கிறேன். அப்புறம் வீட்டிலேயே கதைப் புத்தகங்கள் படிப்பதுண்டு."

"சரி; மேலே சொல்லு!"

"சந்திரஹாஸன் கதையில் இப்படித்தான் ஒரு ராஜகுமாரன் நந்தவனத்தில் வந்து படுத்துத் தூங்குகிறான். மந்திரி குமாரி அங்கே வந்து அவனைப் பார்த்துவிட்டு, தன் ஐயா தான் தனக்கு மாப்பிள்ளை தேடி அனுப்பியிருக்கிறார் என்று நினைத்துக் கொள்கிறான். இப்போது எங்க ஐயாவும் ஊரில் இல்லாதபடியால் அவர்தான் ஒரு வேளை மாப்பிள்ளை தேடி அனுப்பியிருக்கிறாரோ என்று நினைத்தேன். அது என்ன பைத்தியக்கார எண்ணம் என்று தோன்றியதும் சிரிப்பு வந்தது!"

"ஏன் அதைப் பைத்தியக்கார எண்ணம் என்கிறாய்? ஏன் உண்மையாயிருக்கக் கூடாது?"

"உன்னோடு வெறும் பேச்சுப் பேச எனக்கு நேரமில்லை. நீ என்னைப் பார்த்ததும் ஏன் சிரித்தாய் என்று சொல்வாயா, மாட்டாயா?"

"நான் எழுந்து உட்கார்ந்ததும், 'இந்த மண்டபத்தில் உச்சிவேளையில் படுக்கக் கூடாது, மோகினிப் பிசாசு இங்கே இருக்கிறது' என்று சொன்னாயல்லவா? உன்னைத் தவிர வேறு மோகினிப் பிசாசு எங்கேயிருந்து வரப்போகிறது என்று எண்ணிச் சிரித்

தேன். எப்பேர்ப்பட்ட தேவலோகத்து மோகினியும் அழகுக்கு உன்னிடம் பிச்சை வாங்கவேண்டும்!"

"சே! நீ ரொம்பப் பொல்லாதவன். பொய்யும் புளுகும் சொல்லுகிறாய். நான் போய் வருகிறேன்."

"உன்னைப் பற்றி ஒரு பாட்டு இட்டுக் கட்டி யிருக்கிறேன். கேட்டு விட்டுப் போ!"

"பாட்டா? எங்கே, சொல்லு!"

"பொன்னம்மாள் ரொம்பப் பொல்லாதவள்
பொய் என்ற வார்த்தையே சொல்லாதவள்"

என்று குமாரலிங்கம் பாடியதைக் கேட்ட மணியக்காரர் மகள் தன் செவ்விதழ்களை மடித்து அழகு காட்டி விட்டுக் கூடையை எடுத்துத் தலையில் வைத்துக் கொண்டாள். பிறகு ஒரு கையை வீசிக் கொண்டு காலை எட்டி வைத்து நடந்தாள்.

"நாளைக்குக் கட்டாயம் வருவா யல்லவா? இன்னும் இரண்டு மூன்று நாள் உயிர்ப் பிச்சை கொடுத்து நீதான் காப்பாற்ற வேண்டும்!" என்றான் குமாரலிங்கம்.

பொன்னம்மாள் திரும்பிப் பார்த்து இன்னும் ஒரு தடவை அவனுக்கு அழகு காட்டிவிட்டு விரைவாக நடந்தாள். அவள் நடையிலும் தோற்றத்திலும் என்றுமில்லாத மிடுக்கும் கம்பீரமும் அன்று காணப்பட்டன.

* * *

பொன்னம்மாள் போன பிறகு குமாரலிங்கம் சிறிது நேரம் சிந்தனையில் ஆழ்ந்திருந்தான். அன்று அதிகாலை நேரத்தில் அங்கு தான் வந்து உட்கார்ந்ததும் கண்ட கனவுக் காட்சியில் நடந்தது போலவே ஏறக்குறைய இப்போது உண்மையாக நடப்பதை எண்ணி எண்ணி வியந்தான். சிறிது நேரத்துக்கெல்லாம் யாரோ குடியானவர்கள் அந்தப் பக்கம் நெருங்கி வருவதாகத் தோன்றவே, எழுந்து சென்று சற்றுத் தூரத்தில் இடிந்து கிடந்த அரண்மனைக்குள்ளே புகுந்தான். அங்கு எவ்வித நோக்கமும் இன்றி அலைந்தான். மறுபடியும் அதே மாய உணர்ச்சி, — அந்த இடங்களில் எல்லாம் ஏற்கெனவே ஒரு தடவை தான் சஞ்சரித்திருப்பது போன்ற உணர்ச்சி, — அவனைக் கவர்ந்தது.

அதை உதறித் தள்ளிவிட்டு வெளியில் வந்து பாழடைந்த கோட்டை கொத்தளங்களிலும் அருகிலேயிருந்த காட்டுப் பிரதேசங்களிலும் சுற்றி அலைந்தான். அஸ்தமித்ததும் களைப்பு மேலிட்டு வந்தது. மறுபடியும் வஸந்த மண்டபத்தில் உட்கார்ந்தான். அந்தக் கோட்டையிலும் அரண்மனையிலும் முற்காலத்தில் யார் யார் வசித்தார்களோ, என்னென்ன பேசினார்களோ, ஏதேது செய்தார்களோ என்றெல்லாம் அவனுடைய உள்ளம் கற்பனை செய்து கொண்டிருந்தது.

பகலில் வெகு நேரம் தூங்கிவிட்ட படியால் இரவில் சீக்கிரம் தூக்கம் வராதோ என்று முதலில் தோன்றியது. அந்த பயத்துக்குக் காரணமில்லை யென்று சற்று நேரத்துக்கெல்லாம் தெரிந்தது. அவனுடைய கண்கள் சுழன்றன; நித்திரா தேவியின் மெல்லிய பூப்போன்ற கரங்கள் அவனுடைய கண்ணிமைகளைத் தடவிக் கொடுக்கத் தொடங்கின.

அச் சமயம் கிழக்குத் திக்கில் குன்று முகட்டின் மேலே வெள்ளி நிறத்து நிலவின் ஒளி பரவிற்று. சிறிது நேரத்துக்கெல்லாம் ஏறக்குறைய முழு வட்ட வடிவமாயிருந்த சந்திரன் குன்றின் மேலே வந்தது. பால் போன்ற நிலவு அந்தப் பழைய கோட்டை கொத்தளங்களின் மேலே நன்றாய் விழுந்ததும் மறுபடியும் காலையில் நேர்ந்த அதிசய அநுபவம் குமாரலிங்கத்துக்கு ஏற்பட்டது.

பாழடைந்த கோட்டை கொத்தளங்கள் புதிய கோட்டை கொத்தளங்கள் ஆயின. இடிந்து கிடந்த அரண்மனை மேல் மச்சுகள் உன்படப் புதிய வனப்புப் பெற்றுத் திகழ்ந்தன. வஸந்த மண்டபமும் புதிய தோற்றம் அடைந்தது. சுற்றிலும் இருந்த நந்தவனத்திலிருந்து புது மலர்களின் நறுமணம் பரவி வந்து தலையைக் கிறுகிறுக்கச் செய்தது. குமாரலிங்கமும் மாறனேந்தல் இளவரசனாக மாறினான்.

(தொடரும்)



மேஜையில் அவன் கை எட்டக்கூடிய இடத்தில்...

தொழிலாளி மிக கஷ்டப்பட்டு வேலை செய்கிறான். அவன் அறிந்து கொள்கிறான். கணக்குப் போடுகிறான். எழுதுகிறான். உண்டுபண்ணுகிறான். பிறரை சம்மதிக்கச் செய்கிறான். ஒவ்வொரு மணியும் அவனது மூளைக்கு மிக கடினமான வேலையை கொடுக்கிறது. அப்போதைப்போது அவன் தன் கண்ணாடியை எடுத்துவிட்டு சற்று சாய்ந்து கொண்டு ஒருகப் டீ அருந்தி ஓய்வெடுத்துக் கொள்வதில் ஆச்சரியமில்லை. பெரிய தொழிற்சாலையின் போர்ட் அங்கத்தினர் கூடமிடத்திலும் சரி, சொந்தக்காரன் தான் ஒருவனாக நடத்தும் வியாபாரஸ்தலத்திலும் சரி டீ நல்ல ஓய்வைக் கொடுத்து மனோவேகம் அளிக்கிறது. டீ ஒரு நல்ல லாபகரமான நல்ல பழக்கம். சோர்வுறும் சமயம் டீ இளைப்பாற்றி நல்ல புத்துயிர் அளிக்கிறது. அதை நன்கு தயார் செய்து கொள்ளுங்கள்.

நல்ல டீ தயாரிக்கும் முறை



1. டீயை கெட்டிலிலே காய்ச்சாதே. டீபாட் உபயோகி.
2. டீபாட் ஈரமில்லாமலும் வெதுவெதுப்புடனும் இருந்தால்தான் உலர்ந்த டீ தழையைப் போட்டு கொதிஜலம் விட்டதும் அது நன்றாய் ஊறி நல்லமணத்தைத் தரும்.
3. ஒவ்வொரு கப் டீக்கும் ஒரு டீஸ்பூன் தழை போட்டு அதிகப்படியாக டீபாட்டுக்கு ஒரு ஸ்பூனும் போடவும்.
4. புதிதாக கொதிக்கவைத்த தண்ணீரையே உபயோகிக்கவும். ஒருபொழுதும் முன்னே ஒரு தடவை கொதிக்கவைத்த ஜலத்தையோ, கொதிக்காத ஜலத்தையோ அல்லது நெடுநேரம் கொதிக்கவைத்த ஜலத்தையோ உபயோகிக்காதே. ஜலம் குமிழ்களைப்போல் கிளம்பும் பொழுதுதான் அது கொதிப்பதற்கு அடையாளம்.
5. ஐந்து நிமிஷத்திற்கு குறையாமல் ஊறவைக்க வேண்டும்.
6. டீபாட்டில் இருக்கும் பொழுதே சர்க்கரையும், பாலும் சேர்க்காதே. கப்புகளில் ஊற்றியபின் அவைகளை சேர்க்கவும்.

எந்நேரமும் டீ நேரம்தான்

இந்திய டீ மார்க்கெட் விஸ்தரிப்புப் போர்டினால் வெளியிடப்பட்டது

அவள் நினைவு

எஸ்.வி.எஸ்.

மாம்பலம் ஸ்டேஷனில் நான் நுழைவதற்கும் வண்டி பிளாட்பாரத்தில் வருவதற்கும் சரியாயிருந்தது. விழுந்தடித்துக் கொண்டு மாடிப் படிகள் ஏறி இறங்கி இரண்டாவது வகுப்புப் பெட்டிக்குள் நுழைந்தேன். நுழைந்ததும் கார்டு பிஸில் ஊதி விட்டதால் வண்டி கிளம்பி விட்டது. கிளம்பிய வேகத்தில் நான் ஒரு ஸீட்டின் மேல் விழுந்து, ஏற்கெனவே அதில் உட்கார்ந்திருந்தவர் மேல் முட்டிக் கொண்டேன். முட்டிக் கொண்டதற்கு ஆங்கில சம்பிரதாயப்படி ஒரு 'ஸாரி' போடுவோம் என்று திரும்பியபோது எனக்கு ஆச்சரியமாகப் போய்விட்டது. உட்கார்ந்திருப்பது என் ஆலந்தூர் நண்பன் ஆதிகேசவலு அல்லவா? அவனுக்கு என்ன 'ஸாரி' வேண்டியிருக்கிறது!

நான் முட்டிக் கொண்டதையோ, இந்த உலகத்தையோ அவன் லக்ஷியம் பண்ணியதாகத் தெரியவில்லை. அவன் பாட்டுக்குத் தன் மனோ ராஜ்யத்தில் ஈடுபட்டிருந்தான். இதைப் பார்க்க எனக்கு ரொம்ப ஆச்சரியமாகப் போய்விட்டது. ஏனென்றால், "யோசனை கீசனை பண்ணினால் எனக்குத் தூக்கம் வந்து விடும். அதனால் நான் யோசனையே பண்ணுவது கிடையாது!" என்று முன் ஒருதரம் அவன் சொல்லியிருக்கிறான். அப்படிப் பட்டவன் இன்றைக்குத் தன்னை மறந்து யோசனை செய்கிறான் என்றால், எனக்கு ஆச்சரியமாக இருந்ததில் என்ன வியப்பு?

"டேய், ஆதிகேசவலு! என்ன பலே யோசனை பண்றே, யோசனை!" என்றேன். அவன் திடுக்கிட்டு, "நீங்களா? யாரோ என்று நினைத்தேன். ஆனால் சற்று நாழிகைக்கு முன் உங்களைப் பற்றித் தான் நினைத்துக் கொண்டிருந்தேன்......" என்றான்.

நான் குறுக்கிட்டு "ஏன்?" என்றேன்.

அவன் என் காதுக்குள், "எதிர் ஸீட்டில் இரண்டு பேர் உட்கார்ந்திருக்கிறார்களே, அவர்களில் ஜன்னல் ஓரம் இருப்பவனின் கையைப் பார்த்தீர்களா?" என்றான்.

எங்கள் எதிர் ஸீட்டில் இரண்டு பஞ்சாபி சிப்பாய்கள் உட்கார்ந்திருந்தார்கள். அவர்களில் ஜன்னல் ஓரம் உட்கார்ந்திருந்தவன் கையைப் பார்த்தேன். அவன் முன் கையில் ஏதோ ஒரு வார்த்தை ஹிந்தியில் பச்சை குத்தப்பட்டிருந்தது. அது எனக்குப் புரியவில்லை. இருந்தாலும் ஆதிகேசவலுவிடம், "ஆமாம், அதற்கென்ன?" என்றேன்.

"இல்லை, எனக்கு நம்ம ஊர் விஷயம் ஒன்று ஞாபகம் வந்து விட்டது. அதை அப்படியே நினைச்சுக்கிட்டு வந்தேன்."

"என்ன விஷயம்?" என்றேன்.

"வெள்ளைக்காரர்கள் சாதாரணமாகத் தங்கள் கையில் பாம்பையோ, தேளையோ தான் பச்சை குத்திக் கொள்ளுவார்கள். ஆனால் இந்த ஆசாமி 'மாதா' என்று குத்திக்கொண்டிருப்பது வியப்பாக இருந்தது. அத்துடன் எங்கள் பூங்காவனம் சொன்னது ஞாபகம் வந்து விட்டது" என்றான்.

"யார் அந்தப் பூங்காவனம்? அவள் என்ன சொன்னாள்?" என்று கேட்டேன்.

* * *

பூங்காவனம் எங்கள் வீட்டு வேலைக்காரி. அவளுக்குப் பதினேழு, பதினெட்டு வயது இருக்கும். நல்ல கட்டுமஸ்தான தேகம். ஒருவித வசீகரப் பார்வையும் உண்டு அவளிடம். ஆனால் அவள் அசாத்திய முன் கோபக்காரிதான். அவளுக்குத் தாய் தந்தையர் கிடையாது. அவளுக்கிருந்த இரு தமயன்மாரும் பட்டாளத்தில் சேர்ந்து விட்டார்கள். வீட்டில் ஒரு பாட்டி தான் இருந்தாள்.

இதைக் கண்ட ஸெயின்ட் தாமஸ் மவுண்ட் சோல்ஜர்கள் தவறான முறையில் சிற்சில சமயம் நடந்து கொள்ளுவார்கள். அப்போது அவளைப் பார்க்க வேண்டுமே — பத்ரகாளியாகவே மாறி விடுவாள். அவர்களுக்கு நல்ல பாடம் கற்பித்து அனுப்புவாள்.

இவ்வளவு கோபக்காரியின் முகம் எவ்வளவு அழகாக இருக்கும், அதுவும் கோபம் வந்து விட்டால் இன்னும் எவ்வளவு அழகாகி விடும்! இந்த அழகில் மோகம் கொண்ட மோகன் ஸிங் என்ற பஞ்சாபி சிப்பாய் அவளிருக்கும் தெரு வழியாக அடிக்கடி போவான். கண் குளிர ஒரு முறை பார்த்

தால் போதும் என்று அவன் குடிசையை எட்டிப் பார்ப்பான். இதை அவள் கவனிப்பதுபோல் தோன்றினால் தலை கவிழ்ந்து கொண்டு போய் விடுவான். இப்படியாக அவன் பூங்காவனத்துக்குத் தெரியாமலே காதல் புரிந்து வந்தான். இதையெல்லாம் கவனித்து வந்த பூங்காவனத்தின் உள்ளத்தில் ஒருவித பரிதாபம் ஏற்பட்டது. இவன் எவ்வளவோ அடக்க ஒடுக்கமாகப் பழகுகிறான் என்று நினைத்தாள்.

இப்படி அவர்கள் ஒருவரை யொருவர் அடிக்கடி சந்தித்தார்கள். மோகன் லால் இரண்டு வருஷமாகச் சென்னையிலிருந்ததால் அரை குறையாகத் தமிழில் பேசுவான். ஆனால் தமிழில் யாராவது பேசினால் நன்றாகப் புரிந்து கொள்வான்.

பூங்காவனத்துக்கு ஏனோ கோபம் வருவது மட்டும் குறையவில்லை. மோகன் லாலிடம் ஒருபுறம் பரிதாபமும், அன்பு மிருந்தாலும் நேரில் சம்பாஷிக்கும்போது மனசு உடையும்படி பேசுவாள். இவ்வளவு நல்ல மனுஷன் மனம் உடைந்து திரும்புவதில் அவளுக்கு ஒருவித சந்தோஷம் ஏற்பட்டது.

இவ்வளவும் கேட்டுக் கொண்டு மோகன் லால் அடிக்கடி அவளிடம் வந்து கொண்டே யிருப்பான். இதுதான் ஆச்சரியமான விஷயம். மனுஷ இயல்பே மிக்க ஆச்சரியமானதுதானே!

ஒரு நாள் "இது என்ன, நாம் இவனை இப்படிப் படுத்துகிறோம், இவன் விடாமல் நம்மை நாடி வருகிறானே? அப்படியானால் இவன் நம்மிடம் எவ்வளவு அன்பு கொண்டிருக்க வேண்டும்? ஏன், நான்கூட அவனிடம் எவ்வளவு அன்பு கொண்டிருக்கிறேன்? என்றாலும், என் அன்பை வெளிக்குக் காட்டிக்கொள்ள முடியவில்லை. அவன் கையைப் பார்க்குந்தோறும் என் உள்ளத்தில் ஏதோ வேதனை உண்டாகிறது. நான் என்ன செய்யட்டும்? அதுவும் ஆறுமுகம் இந்த எழுத்துக்களைப் பற்றிச் சொல்வதை நினைத்தால் என் மனசு அப்படியே பிளந்துவிடும் போலிருக்கிறது!" என்றெல்லாம் எண்ணினாள்.

அடுத்த நாள் பூங்காவனத்தின் குடிசைப் பக்கம் மோகன் லால் வந்தான். அவனைக் கண்டதும் என்றுமில்லாத திருநாளாக ஒரு புன்முறுவல் பூத்தாள் பூங்காவனம். இது அவனுக்கு மிக்க வியப்பை அளித்ததோடு, மகிழ்ச்சியையும் அளித்தது.

"என்ன பூங்காவனம்! ஏன் சிரிக்கிறே?" என்றான்.

"இன்னிக்கு உன்னைப் பார்த்தால் சந்தோசமா இருக்குது!" என்றாள் பூங்காவனம்.

மோகன்லாலுக்கு இந்த எதிர்பாராத வரவேற்பு அளவுகடந்த மகிழ்ச்சியை அளித்தது. 'ஏது, இன்று பூங்காவனம் இவ்வளவு மாறிவிட்டாள்!' என்று எண்ணி "இன்னிக்கு இவ்வளவு குஷிக்குக் காரணம் என்ன?" என்று ஹிந்தியும் தமிழும் கலந்த பாஷையில் கேட்டான்.

அப்போது பக்கத்து மைதானத்தில் மாடு மேய்த்துக் கொண்டிருந்த பையன் ஒரு தெம்மாங்கு பாடினான்:

ஒருத்திக்கு ஒருமகன்டி
தங்கமே தங்கம்
உன்னைநம்பி வந்தவன்டி
தங்கமே தங்கம்
பொறுமை பெருத்தவன்டி
தங்கமே தங்கம்
போகவரப் பேசாதடி
தங்கமே தங்கம்!

இதைக் கேட்டதும் பூங்காவனத்துக்குத் துக்கம் பீறிட்டுக்கொண்டு வந்தது.

இவனைப் பெற்ற தாயார் யாரோ, எங்கேயிருக்கிறாளோ, இவன் இப்படி நம்முடன் இருப்பதைக் கேட்டால் அவள் எவ்வளவு வேதனைப் படுவாளோ என்றெல்லாம் எண்ணினாள். கண்களில் நீர் பெருகி விட்டது. சந்தோஷமாக இத்தனை நாழிகை இருந்தவள் இப்படித் திடீரென்று அழ ஆரம்பித்துவிடவே மோகன்லாலுக்கு ஒன்றும் புரியவில்லை. "ஏன் அழுகிறே?" என்றான்.

"உன் ஊரிலே உனக்கு ஒருத்தி யிருக்காளாமே, அவள் பெயரைத்தான் நீ கையிலே குத்திகிட்டு வந்திருக்கிறதாக ஊரிலே எல்லாம் சொல்றாங்களே!" என்று சொல்லிவிட்டு, இன்னும் விசித்து விசித்து அழத் தொடங்கினாள்.

மோகன்லாலுக்கு விஷயம் புரிந்து விட்டது. "இது யார் பெயரும் அல்ல; எனக்கு ஊரில் யாரும் இல்லை. என் கையில் 'மாக்' என்றுதான் குத்திக் கொண்டிருக்கிறேன். 'மாக்' என்றால் எங்க பாஷையில் தாயார்

என்று அர்த்தம். நான் பட்டாளத்தில் சேர்ந்த போது, என் தாயார் சுவிலடிக்குக் கண்ணீருடன் வந்து, 'அப்பா! இங்கே ஒரு கிழத் தாயார் இருக்கிறாள் என்பதை மறந்து விடாதே!' என்று சொல்லி விட்டுப் போனாள். இது என் மனசை ரொம்பவும் பாதித்தது. நாங்கள் பயிற்சி பெற இறங்கிய கரையை அடைந்ததும் முதற் காரியமாக என் அன்னையை எப்போதும் நினைவிலிருத்திக் கொள்ள வேண்டுமென்று 'மாம்' என்று பச்சை குத்திக் கொண்டேன். குத்திக்கொண்டு என்ன பயன்? உன்னைப் பார்த்ததிலிருந்து நான் அவளை மறந்து விட்டேன். நீ இப்போது என் தாயாரை ஞாபகப்படுத்தி விட்டாய். என் தாயாரின் கட்டளைப்படி, இனி நான் உன்னுடன் உறவு வைத்துக்கொள்ள முடியாது. என்னை மன்னித்து விடு!'' என்று கண்களில் நீர் மல்கக் கூறிவிட்டுப் போனான். போகும் போது அவளை இரண்டொரு முறை திரும்பிப் பார்த்தான். பிறகு அவன் அவளைச் சந்திக்கவே யில்லை.

* * *

இதை பதித்த அடுத்த தெரு ஆறுமுகம் சும்மா இருக்கவில்லை. மிகவும் சந்தோஷப்பட்டுக் கொண்டு பூங்காவனத்தினிடம் வந்தான். எல்லாம் அவன் செய்த கூத்துத்தானே?

மோகன் லிங்குடன் பூங்காவனம் சிரித்துக் களித்துப் பேசுவதைப் பார்த்து வந்த ஆறுமுகத்துக்கு மோகன் லிங்கின் மேல் ஒருவிதப் பொறாமை ஏற்பட்டது. 'பூங்காவனம் நம்முடன் பேச மாட்டேன் என்கிறாள், அவனுடன் மட்டும் என்ன பேச்சு வேண்டி யிருக்கிறது?' என்று நினைத்தான். ஆனால் இதை பூங்காவனத்தினிடம் சொல்வதற்கு அவனுக்குத் தைரியம் வரவில்லை. அதற்காக அவன் பூங்காவனத்தினிடம் மோகன் லிங்குக்கு அவளுடைய ஊரில் ஒரு காதலி இருக்கிறாள் என்றும், அவளுடைய பெயரையே அவன் தன் கையில் பச்சை குத்திக் கொண்டிருக்கிறான் என்றும் சொல்லி யிருந்தான். இந்தப் பொய்க்குத் தண்டனையாகப் பூங்காவனம், ஆறுமுகத்தையே கடைசியில் கலியாணம் செய்துகொண்டாள்!......

கதை முடிவடைந்தது. பீச்சு ஸ்டேஷனும் வந்தது. எல்லோரும் வண்டியிலிருந்து இறங்கி அவரவர் வழியே சென்றோம்.



படிக்கப் பார்!

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் (ஆரண்ய காண்டம்)

[ஆசிரியர்: தேறியூர் ஸுப்ரஹ்மண்ய சாஸ்திரிகள்; பிரசுரர்: இசி ப்ரதர்ஸ், திருவல்லிக்கேணி, சென்னை; விலை: ரூ. 3.]

உலக இதிகாசங்களிலேயே மிகச் சிறந்த இதிஹாசம் வால்மீகி பகவான் அருளிய ராமாயணந்தான். இந்த அற்புத இதிகாசத்தை ஸம்ஸ்கிருத ச்லோகங்களின் அரிய கருத்துக்கள் புரிந்தும் படிக்கப் படிக்க ஆசை ஆசையாய்ப் பெருகும் விசிஷ்ட வாசகங்களில் வால்மீகி முனிவர் அருளியிருக்கிறார். அத்தகைய மகா இதிகாசத்தை நாமே படித்து அதன் உட்கருத்துக்களையும் பூரணமாய்த் தெரிந்து கொள்ளும் பொருட்டு, சாஸ்திர ரத்னம், வேதமூர்த்தி, கவிகுஞ்சரம், வித்யாவாசஸ்பதி, 'வேதாந்த தத்வ மர்மோபதேசகர்' முதலான அநேக பிருதுகளால் அலங்கரிக்கப் பட்டவரான பிரம்மஸ்ரீ தேறியூர் ஸுப்ரஹ்மண்ய சாஸ்திரிகள் அவர்கள் தமிழில் விரிவுரையுடன் வெளியிட்டு வருகிறார். இப்போது மூன்றாவது காண்டமான ஆரண்ய காண்டம் வெளியாகியிருக்கிறது.

ராமன் காட்டிலிருக்கும்போது ராவணன் மாய வேஷம் தரித்துச் சீதையை அபகரித்துச் செல்லும் கதைப் பகுதியைக் கொண்டது இந்தக் காண்டம். வால்மீகி பகவானுடைய முக்கியமான ச்லோகங்களை மேற்கோள்களாகக் கொண்டு சாஸ்திரிகள் நமக்கே உரிய தனி நடையில் வேதாந்த விசாரணைகள் புரிந்து கொண்டும் விசேஷ அர்த்தங்களை விவரமாக விளக்கிக் கொண்டும் செல்கிறார். இதையெல்லாம் படிக்கும்போது வால்மீகி இவ்வளவு அபாரமான விஷயங்களை ஒரே ஒரு அடியிலும், ஒரே ஒரு வார்த்தையிலும் எப்படித்தான் அமைத்தாரோ என்று அதிசயம் ஏற்படுகிறது!

வால்மீகி ராமாயண பக்தர்களுக்கு பிரம்மஸ்ரீ சாஸ்திரியாருடைய ஆரண்ய காண்டம் அரிய பொக்கிஷமாகும்.

சேர நாடு

[ஆண்டு சந்தா: ரூ. 6-0-0; விலாசம்: ஆசிரியர், "சேர நாடு" தெம்மாரா, கொச்சி.]

தற்காலத்தில் கேரளம் என்று சொல்லப்படும் சேர நாடு முன்னாளில் தமிழ் நாட்டின் ஒரு பகுதியாகவே இருந்தது. பழைய சேர நாட்டின் இளவரசரான இளங்கோவடிகள் 'நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்றோர் மணி ஆரத்தைத்' தமிழ்த் தாய்க்குப் பூட்டினார். சேரமான் பெருமான் இனிய தமிழின் பாமாலைகள் புனைந்து சிவபிரானுக்குச் சூட்டினார். அத்தகைய சேர நாட்டில் தற்காலம் தமிழ்த் தொண்டு செய்வோர் அவ்வளவாக இல்லாமலிருந்தனர். அந்தக் குறையை நிவர்த்தி செய்வதற்குச் "சேர நாடு" என்னும் மாதமிருமுறைப் பத்திரிகை இவ்வாண்டு தைப் பொங்கலாகிய தமிழ்த் திருநாளில் வெளியாகியிருக்கிறது. இதன் ஆசிரியர் வித்துவான் ஸ்ரீ. சதானந்தம் அவர்கள் சிறந்த தமிழ் எழுத்தாளர் என்று பத்திரிகையைப் புரட்டிப் பார்த்தால் தெரிய வரும். முதல் இதழில் புத்தாண்டு, பொங்கல் திருநாள், அரசியல் கொந்தளிப்பு, தீண்டாமைப் பேய், எழுத்தாளர் மகாநாடு, தமிழ் வளர்ச்சிக் கழகம் முதலிய பல விஷயங்களைப் பற்றி ரஸமான கட்டுரைகளும் குறிப்புகளும் வெளியாகியிருக்கின்றன.

ஞானசம்பந்தம் (ஆறாவது ஆண்டு மலர்)

[பிரசுரம்:— "ஞானசம்பந்தம்" காரியாலயம், தருமபுர ஆதீனம், தருமபுரம், மாயவரம்; ஆண்டு சந்தா: ரூ. 1-8-0.]

"ஞானசம்பந்த"த்தின் ஆறாவது ஆண்டு மலர் மூவர்ண மேலட்டைச் சித்திரத்துடன் அழகாக வெளியாகியிருக்கிறது. ஆதீனத் தலைவர்களின் படங்களும் மடாலயத் தொண்டின் விசேஷத்தை விளக்கும் பல படங்களும் இம் மலரில் அடங்கி யிருக்கின்றன. கவியோகி சுத்தானந்த பாரதியின் ஞானக் கனல் வீசும் கவிதைகள் மலரில் ஞானசம்பந்தத்தை அதிகமாக்கி யிருக்கின்றன. "ஞானசம்பந்தம்" சைவ சமய அன்பர்களுக்கும் தமிழன்பர்களுக்கும் ஒரு நல்விருந்து.

காதலா ......?

[ஆசிரியர்: க. ரா.; பிரசுரம்: தமிழ்ப் புத்தகாலயம், மயிலாப்பூர், சென்னை; விலை: ரூ. 2-8-0]

மாணவ, மாணவிகள் சேர்ந்து படிப்பதின் தன்மை ஏற்படுமா என்ற விஷயத்தில் பெருவாரியான அபிப்பிராய பேதம் இருப்பது இயல்பு. இந்த நூலை எழுதியவரே கல்லூரி மாணவராதலால், கல்லூரியில் கூட்டுக் கல்வி முறையினால் ஏற்படும் ரஸங்களையும் விரஸங்



"அம்மா! உயிர் போகுது. அம்மா! ஏதாச்சும் போடுங்க, அம்மா!"

"சரி சரி; சும்மாக் கத்தாதே! ஒரு பழைய தோசை இருக்கு; போடுறேன், சாப்பிடு!"

"ஏதோ போடுங்க, போகிற உயிர் எப்படிப் போனால் என்னங்க?"

வினையும் விளக்கமாக எழுதி யிருக்கிறார். கதைப் போக்கு சுவாரஸ்யமா யிருக்கிறது. கூட்டுக் கல்வியினால் இந்த நூலின் கதாநாயகன் அடைந்த நன்மையைப் பற்றிச் சொல்லுகிறார். "கூட்டுக் கல்வி முறை ஒழிய வேண்டும் என்பதுதான் என் நோக்கம்" என்னும் ஆசிரியரின் கூற்று ஐயப்பாட்டை உண்டாக்குகிறது.

கைத்தொழில்

[ஆசிரியர்: கோ. சோமநாதன்; விலாசம்: கைத்தொழில் பதிப்பகம், 396, தங்கசாலைத் தெரு, ஜி. டி. சென்னை. விலை அணு 4; வருஷ சந்தா ரூபாய் 3.]

கைத்தொழில் வளர்ச்சியை முன்னிட்டு வெளி வரும் மாதம் ஒரு புத்தகம். சென்னை மாகாணத்திலும், இந்தியாவின் மற்ற பாகங்களிலுமுள்ள முக்கிய வர்த்தகர்களின் விலாசங்களும் விளம்பரங்களும் கொடுக்கப்பட்டு வருகிறது. கைத்தொழில் சம்பந்தமான இயந்திரங்களை எங்கே வாங்கலாம் என்ற விவரங்களும் கேள்வி-பதில் முறையிலே ரஸமாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. வர்த்தகர்களுக்கும் கைத்தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கும் மிகவும் உபயோகமான நூல்.

வாலாஜாபாத் இந்து மத பாடசாலை

(30-ஆம் ஆண்டு அறிக்கை—1947)

தமிழ்நாட்டில் உள்ள கல்வி ஸ்தாபனம் ஒவ்வொன்றும் கல்வி முன்னேற்றத்தில் கவலை உள்ள கனதனவான்கள் ஒவ்வொருவரும் இந்த அறிக்கையை வரவழைத்து அவசியம் பார்வை யிட்டுப் பயனடைய வேண்டும். விலாசம்: இந்துமத பாடசாலை, வாலாஜாபாத், செங்கற்பட்டு ஜில்லா.

இரை ஒலி (பொங்கல் மலர்)

[ஆசிரியர்: ராம தியாகராஜன்; பிரகாசம்: ராம்பா பத்திரிகாலயம், ராயவரம், புதுக்கோட்டை சமஸ்தானம்; விலை: ரூ. 2—4—0]

எழில் (மாதம் ஒரு புத்தகம்)

[பதிப்பாசிரியர்: ச. தமிழ்ச்சாத்தி; பிரசுரம்: சான்வதி பதிப்பகம்: இன்னாஜார் ரயில்வே ஸ்டேஷன்; (எம். எஸ். எம்.) விலை: ரூபாய் 1—0—0.]

'இரை ஒலி' அலை எழுந்து ஒய்யாரமாக ஒலிக்கிறது. 'எழில்' மிக்க எழிலுடன் ஒளியாக விளங்குகிறது.

காலக்ஷேபம்

உயர்த்த வேண்டியதுதான்!

ஒரு குமாஸ்தா கம்பெனியின் பணத்தைக் கையாடிவிட்டான். கம்பெனி மானேஜர், அவனை என்ன செய்வதென்று காஷியரைக் கேட்டார்.

காஷியர்:—அவனை வேலையில் வைத்துக் கொண்டு சம்பளத்தில் மாதம் கொஞ்சமாகப் பிடித்து ஈடு செய்யலாம்.

மானேஜர்:—அவன் திருடிய தொகை அவனுடைய சம்பளத்தைவிட எவ்வளவோ அதிகமாயிற்றே!

காஷியர் — அப்படியானால் அவனுடைய சம்பளத்தை உயர்த்துங்கள்!

★

உண்மை

அம்மா:—என்டா, கப்பு! அத்தையைக் கழுதை என்று வைதாயாமே? நிஜமாகவா?

கப்பு:—ஆமாம், அம்மா!

அம்மா:—நிஜத்தைச் சொன்னதால் உன்னை மன்னிச்சுட்டேன், போ!

நியாயம் இல்லையா?

பிரதிவாதி (உரத்த குரலில்):—நியாயம்! நியாயம்! எனக்கு நியாயம் கிடைக்க வேண்டும்!

ஜட்ஜ் (மேஜையைத் தட்டிக் கொண்டு):—பிரதிவாதி இப்படிக் கண்டபடி கேட்கக் கூடாது. நீ இப்போது இருப்பது நியாயஸ்தலம் என்பதை அறியவேண்டும்!

★

வேண்டாத விஷயம்


கடைக்காரன்:—இந்தக் கடிகாரம் ஒரு மனுஷ ஆயுசு காலத்துக்கு உழைக்கும், ஐயா!

வந்தவர்:—அப்படியானால் வேண்டாம்; இப்போதே எனக்கு அறுபது வயதாகி விட்டது!

★

நல்ல பதில்

வீட்டுக்காரன் வாடகை கேட்க வந்தான். நாராயண ஐயரின் மனைவி வாசலில் நின்று கொண்டிருந்தாள்.



வீட்டுக்காரன்:—நாராயணய்யர் வீட்டிலே இருக்கிறாரா, அம்மா!

ஐயரின் மனைவி:—இல்லை, வெளியிலே போயிருக்கிறார்.

வீட்டுக்காரன்:—நான் வந்த போது அவருடைய நிழல் அந்தக் கதவில் தெரிந்ததே!

ஐயரின் மனைவி:—அது நாராயணய்யருடைய நிழல்தான்; அவர் இல்லை!

—க. ரங்கராஜன்.

கம்பர் தரும் காட்சி

டி.கே.சி.

168. தபசி வருகிறார்!

லக்ஷ்மணன் பர்ணசாலையை விட்டுப் போய் விட்டான் என்று தெரிந்தவுடன் ராவணன் அந்தப் பர்ண சாலையை நோக்கிப் புறப்படுகிறான்.

சன்னியாசி வேஷம் பூண்டு வரும் அவன், நெடுந்தூரம் நடந்து வந்த களைப்பைக் காட்டும் பாவனையில் மெள்ள மெள்ள நடக்கிறான். சவுக்க காலத்தில் பக்திமயமான பாடல்களைப் பாடிக் கொண்டு நடக்கிறான். நடையும் தாளமும் ஒத்து நிகழ்கின்றன. புஷ்பம் எப்படி மெதுவாக மலர்கிறதோ, அவ்வளவு மிருதுவாய் இருக்கிறது நடை. பூமியில் பட்டதும் காலை உடனே எடுத்து வைக்கிறான், தாளத்தோடு ஒட்டுவதற்காக.

பூப்பொதி அவிழ்ந்தன
நடையன், பூதலம்
தீப்பொதித் தாம்என
மிதிக்குஞ் செய்கையன்,
காப்பரு நடுக்குறுங்
காலன், கையினன்,—
மூப்பெனும் பருவமும்
முனிய முற்றினான்.

[பூப்பொதி: பூ மொட்டு; பூதலம் தீப் பொதிந்து ஆம் என: பூமியானது ஏதோ தீயால் மூடப் பட்டிருக்கிறது என்று சொல்லும்படி இருந்தது அவன் மிதிக்குஞ் செயல்: காப்பு அரும் நடுக்குறும் காலன் கையினன்: எவ்வளவு முயன்றாலும் தடுக்க முடியாதபடி இருந்தது. காலின் நடுக்கமும் கையின் நடுக்கமும்: மூப்பு எனும் பருவமும் முனிய முற்றினான்: மூப்பின் அதி தேவதையே வெறுக்கும் படி இருந்ததாம், நரை திரை தளர்ச்சி யெல்லாம்.]

⁂

தவத்துக்குரிய மாலைகளை அணிந்திருக்கிறான். தாமரைமணி, துளசிமணி இவைகளாலான மாலைகளை அணிந்திருக்கிறான். உட்கார்ந்து தியானம் செய்வதற்காக ஆமை ஓட்டினாலான ஆசனமும் எடுத்து வருகிறான்.

தாமரைக் கண்ணொ(டு)ஏர்
தவத்தின் மாலையன்,
ஆமையின் இருக்கையன்,
வளைந்த ஆக்கையன்,
நாமநூல் மார்பினன்
நணுகினான்அரோ!
தூமனத்(து) அருந்ததி
இருந்த சூழல்வாய்.

[தாமரைக் கண்: தாமரை மணி; ஏர் தவத்தின் மாலையன்: தவத்துக்குரிய கண்டிகை அணிந்திருக்கிறான்; ஆமையின் இருக்கையன்: ஆமை ஓட்டை ஆசனமாக எடுத்து வருகிறான்; நாம நூல் மார்பினன்: பூணூலை அணிந்திருக்கிறான்; தூ மனத்து: அருந்ததியை ஒத்த சீதை இருந்த இடத்துக்கு; நணுகினான் அரோ: வந்தே விட்டான்.

குறிப்பு:—வனத்துள் வாழும் தவத்துக்குத் தக்கவராகவே மாலையும் ஆசனமும் கைக்கொண்டிருக்கிறான் ராவணன்.]

⁂

புனிதமான பர்ணசாலையின் வாசலை அடைந்தான். குழறி நடுங்கிய சொல்லோடு கேட்டான்: "இந்த வீட்டி லிருப்பவர் யார்?" என்று.

தோமறு சாலையின்
வாயில் துன்னினான்,
நாமுதல் குழறிட
நடுங்கு சொல்லினன்,
'யாவிர் இவ் இருக்கையுள்
இருந்து ளீர்' என்றான்,—
தேவரும் மருள்கொளத்
திரிந்த மேனியான்.

[தோம் அறு சாலையின்: புனிதமான பர்ண சாலையின்; வாயில் துன்னினான்:



வாசலை அடைந்தவனும்; நாமுதம் குழறிட? இசையிலும் பேச்சிலும் திருந்திய நாவானது வேண்டுமென்று குழறவும்; தடுங்கு சொல்லினன்: தடுங்கிய சொல்லினனும்; யாவர் இல் இருக்கையுள் இருந்துளீர்: இந்த வீட்டில் இருக்கிறது யார்; தேவரும் மருள் கொளத் திகழ்ந்த மேனியான்; தேவர்கள் மேலே இருந்து சதா ராவணனைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்களாம்: அவன் வேஷம் போடுகிறதையும் பார்த்துக் கொண்டு தான் இருக்கிறார்கள்! ஆனாலும் இனங் கண்டு கொள்ள முடியவில்லை. அவ்வளவு மாறுபாட்டை உண்டாக்கி விட்டது. தேவர்களுக்கே இவ்வளவு மயக்கம் என்றால், மற்றவர்களைப் பற்றிக் கேட்கவா வேண்டும்!]

•••

அந்தச் சமயத்தில் சீதை அங்கு வருகிறாள். வந்து கொண்டிருந்த சன்னியாசியைப் பார்த்துப் பரிசுத்தமான சிந்தனை உள்ளவன் என்றும், குற்றமற்ற நோன்புடையவன் என்றுமே எண்ணுகிறாள்.

தோகையும் அவ்வழித்,
தோமில் சிந்தனை,
சேகறு நோன்பினர்,
என்னும் சிந்தையால்;
பாலியல் கிளவியாள்
பவளக் கொம்பர்போன்(று)
'ஏகுமின் ஈண்(டு)' என
எதிர்வந்(து) எய்தினாள்.

[தோகையும் அவ்வழி: சீதையும் அந்தச் சமயத்தில்; தோமில் சிந்தனை சேகறு நோன்பினர்: குற்றமற்ற மனமும், குற்றமற்ற நோன்பும் உடையவர் யாரோ ஒருவர் என்னும் அபிப்பிராயம் கொண்டவளாய்; பாலியல் கிளவியாள்: தேன் போலும் இனிய சொல்லையுடைய சீதை; பவளக் கொம்பர் போன்று: பவளக் கொடியில் புஷ்பங்கள் பூத்திருந்தது போல; எதிர் வந்து எய்தினாள்: சன்னியாசிக்கு எதிரே வந்தாள்; ஏகுமின் ஈண்டு என: இங்கே வாருங்கள் என்று சொல்லிக் கொண்டு.]

சீதையின் உருவம் எங்கும் காணாத அழகு கொண்டது. உருவத்தைவிட அழகியது அவளுடைய சொல். அத்தகைய 'பெண் தெய்வம்', "வர வேண்டும்" என்று உண்மையான பரிவோடும் அன்போடும் உபசரிக்கிறாள். ராவணன் என்ன ஆகிறான்? பார்க்கலாம்.

இரு நண்பர்கள்

ஆசிரியர்: சுதர்சன் மொழிபெயர்ப்பு: ரா. வீழிநாதன்

நந்தகிசோர் சொல்லுகிறான்:

10. இதென்ன விபரீதம்?

சில தினங்களுக்கெல்லாம் இன்பச் சோலையாகத் திகழ்ந்து இன்முகத்துடன் வரவேற்ற இந்த உலகம், சிறிது சிறிதாக என்னை விட்டு அகல ஆரம்பித்து விட்டது. புஸ்தகங்களை எடுத்து வைத்துக் கொண்டு படிக்க உட்கார்ந்தால் என் நம்பிக்கைகளையெல்லாம் குலைக்கும் பொருட்டுப் பேரிரைச்சல் புரிந்துகொண்டு பெருங் கடல் பொங்கி வருவது போன்ற காட்சி என் மனத்திரையில் எழ ஆரம்பித்து விட்டது. எங்கே பார்த்தாலும் ஒரே தண்ணீர்க் காடு. என் நம்பிக்கை என்னும் அந்த இன்பச் சோலை சில சமயம் வெகு தூரத்துக்கப்பால் காட்சி யளித்தது; சில சமயம் கூப்பிடுதூரத்தில் காட்சி யளித்தது; சில சமயம் ஏமாற்றம் என்னும் ஆழமான கடலிலேயே மூழ்க ஆரம்பித்து விட்டது; சில சமயம் மிதந்தது. சில மாதங்கள் சென்றதும், "நானாவது, முதலாவதாகத் தேறுவதாவது? பரீட்சையில் தேறுவதே சந்தேகம் தான்!" என்ற எண்ணம் உறுதிப்படலாயிற்று. நான் கண்டதெல்லாம் வெறும் பகற் கனவு என்ற முடிவுக்கு வந்து விட்டேன். 'இவன் உதவாக்கரை, சக்கர வட்டமாகப் பேசுவானே தவிர உருப்படியாக ஒன்றும் செய்ய மாட்டான்' என்பதை நன்கு அறிந்து கொண்டு ரூபாராணி எனக்கு இந்தக் கடும் நிபந்தனையை விதித்திருக்க வேண்டும். நான் ஒரு அடி முட்டாள்; அவளது சூழ்ச்சியை என்னால் புரிந்து கொள்ளக்கூட முடியவில்லை. அவள் புத்திசாலி; வெகு தந்திரமாக என்னை ஏமாற்றி விட்டாள்!

ஆயினும் நான் தைரியத்தைச் சிறிதும் கைவிடவில்லை. என்னால் ஆனமட்டும் உழைத்து விடுவதெனக் கங்கணம் கட்டிக் கொண்டேன்.

கரையோ வெகு தூரத்துக்கப்பால் இருக்கிறது; ஆழமோ அதிகம்; இழுப்போ ஜாஸ்தி; மூச்சோ திணற ஆரம்பித்து விட்டது. இருந்தாலும், 'எப்படியாவது உயிர் தப்பிவிட மாட்டோமா? ஏதாவது ஒரு அலை நம்மைக் கரையில் கொண்டு போய்ச் சேர்த்து விடாதா? அல்லது தரைதான் காலுக்குத் தட்டுப்பட்டு விடக் கூடாதா? இல்லை, ஒரு கொம்பாவது கைக்குக் கிட்டிவிடக் கூடாதா?' என்ற நம்பிக்கையில் நீந்துபவன் ஒருவன் கை கால்களை உதைத்துக் கொள்வானே, அவனைப் போலத்தான் நானும் முயற்சியில் ஈடுபட்டேன்.

வாழ்க்கை நம்பிக்கை யென்னும் மெல்லிய—பலமற்ற சிறு நூலுடன் இணைக்கப் பட்டிருக்கிறது என்பதை நான் நன்கு உணர்ந்து கொண்டேன். சில தினங்களுக்கெல்லாம் என் நிலைமை அடியோடு மாறி விட்டது. சாப்பாட்டை மறந்தேன்; விளையாட்டையும் விட்டொழித்தேன்! மாற்றுத் துணி அன்றாடம் உடுத்த வேண்டும் என்ற எண்ணம்கூட என்னை விட்டு அகன்று விட்டது. வாயில் ஈ புகுவது கூடத் தெரியவில்லை என்று சொல்லுவார்களே, அந்த நிலையை அடைந்து விட்டேன். படிப்பு! படிப்பு! இரவு பகல் எந்நேரத்திலும் படிப்பு!! இதே சிந்தனைதான் என் உள்ளத்தில் இடம் பெற்றிருந்தது. இப்படிப் புஸ்தகங்களையே கட்டிக்கொண்டு அழுதால் உடம்பு எதற்கு உருப்படும்? கண்கள் கொஞ்சம் கொஞ்சமாக உள்ளே போய்விட்டன. முகம் இரத்தச் சோகையைப்போல் வெளுத்து விட்டது. என் உடல் நலம் இப்படிக் குன்றுவதைக் காணக்

காண என் தாய் தந்தையருக்கு வெகு கவலையாகி விட்டது. "நீ படித்து என்ன செய்யப்போகிறாய்? சாப்பாட்டுக்கோ ஏதேஷ்டமாக இருக்கிறது. உனக்கு ஏன் வீண்கவலை? பேசாமல் மஸூரிக்கோ, நைனி தாலுக்கோ போய்க் கவலை யற்று இரு!" என்று அழாக் குறையாக என்னை வேண்டிக் கொண்டனர். நான் படிக்கவேண்டும் என்ற ஆசையினாலா இப்படிப் பிரயாசை எடுத்துக் கொண்டிருந்தேன்? என் லட்சியம் வேறல்லவா? ஆகையால் என் உடல் நலம் குன்றுவதையும் பொருட்படுத்தாமல் காரியத்திலேயே கண்ணாயிருந்தேன்.

எனக்கு இலேசாக ஜ்வரம் வர ஆரம்பித்தது. ஆனாலும் நான் அதைப் பொருட்படுத்தவில்லை. சாவு என்னை நெருங்கி வருகிறது என்பதை உணர்ந்தேன். ஆனால் அதற்காக நான் அஞ்சவில்லை. புன்முறுவலுடன் அதை வரவேற்கவே தயாராகி விட்டேன்.

ஒரு நாள் என்னை வித்யாசங்கர் 'பார்க்'கில் சந்தித்தான். "ஏன் சந்திரசேகர், எதற்காக இப்படிப் படித்துச் சாகிறாய்? இது மாதிரி நீ விடாமல் படித்தால் உன் உடம்பு எதற்காகும்? ஜ்வரம் வந்தாலும் வந்து விடுமே!" என்றான்.

'மனிதனுக்கு உடலும் மனமும் பலஹீன முற்றுவிட்டால் தனது உயிருக்குயிரான நண்பனிடம் பேசக்கூடத் துணிவு ஏற்படுவதில்லை' என்று யாரோ சொல்லி நான் கேள்விப்பட்டிருக்கிறேன். அது உண்மைதான் என்று இப்போது எனக்கு விளங்கிற்று. நான் சற்று வெட்கத்துடன் வித்யாசங்கரைப் பார்த்துப் புஸ்தகத்தை மூடி வைத்தவாறே, "ஜ்வரம் வருவானேன்?" என்றேன்.

"சற்று முகத்தைக் கண்ணாடியில் பார்த்துக் கொள். எலும்பு விட்டுப் போய் தேவாங்கு மாதிரி ஆகிவிட்டாயே?"

"தேவலையே, நீ சொல்லுவது? முன்னைக்கு இப்பொழுது நான் பருத்துப் போய்விட்டேன் என்றல்லவா எண்ணிக் கொண்டிருக்கிறேன்? நீ என்னடா வென்றால் நான் எலும்பு விட்டுப் போய்க் கிடக்கிறேன் என்கிறாயே!"

"முன்பெல்லாம் 'செக்கச் செவேல்' என்று நீ பார்ப்பதற்கு எவ்வளவு அழகாக இருப்பாய்? அந்தச் சிவப்பு எல்லாம் மறைந்து இப்படி வெளுத்து விட்டதே!" என்று சொல்லிக்கொண்டே என் அருகில் வந்து உட்கார்ந்தான். பிறகு என் புஸ்தகங்களை யெல்லாம் எடுத்துப் புரட்டிப் பார்க்க ஆரம்பித்தான்.

"பரீட்சையோ நெருங்கி விட்டது. இப்பொழுது படிக்கவில்லை யென்றால் அப்புறம் எப்பொழுது படிக்கிறது?" என்றேன் நான்.

வித்யாசங்கர் புஸ்தகங்களை ஒருபுறம் வைத்துவிட்டு, என் அருகில் இன்னும் நெருங்கி உட்கார்ந்துகொண்டு, "உன்னைப் படிக்க வேண்டாம் என்று யார் தடுக்கிறார்கள்? நன்றாய்ப் படி; ஆனால் உடம்பையும் கவனித்துக் கொள். உன்னைப் போல் காலேஜிலே ஒருத்தன் கூட உழைத்துப் படிக்கவில்லை. தெரியுமோ, இல்லையோ?" என்று கேட்டான்.

"நான் பரீட்சைக்காக இப்படி சிரமப் பட்டுப் படிக்கிறேன் என்று நினைக்கிறாயா? அதெல்லாம் இல்லை. இது ஒரு காதல் பரீட்சை.. இதில் நான் முதலாவதாகத் தேறவில்லை யென்றால் வாழ்வு பூராவும் நான் அழுது கொண்டிருக்க வேண்டியதுதான்!"

"அப்படியானால் இது நிஜம்தானா? நான் கேள்விப்பட்டேன். ஆனால் எனக்கு நம்பிக்கை ஏற்படவில்லை. வேண்டுமென்று யாரோ கதை கட்டி விட்டிருக்கிறார்கள் என்றல்லவா நான் எண்ணிக் கொண்டிருந்தேன்?"

"அதெல்லாம் ஒருவரும் கதை கட்டிவிடவில்லை, அப்பா! எல்லாம் நிஜம்தான். கொஞ்சமும் பொய்க் கலப்பே இல்லை. எப்படியாவது வெற்றி பெற்றாக வேண்டும்."




“இந்தப் பெண், உன் உயிரை வாங்கி விட்டுத்தான் மறு காரியம் பார்ப்பான் போலிருக்கிறது. அவனைப் போய்க் கண்டித்து விட்டுத்தான் வரவேண்டும்.”

“என்னத்தைப் போய்க் கண்டிக்கப் போகிறாய்?”

“கொடுக்கிற ‘டோஸ்’லே அவன் நாக்கைப் பிடுங்கிக் கொண்டு சாக வேண்டும்! ‘நான் செய்தது தப்பு, தப்பு’ என்று உன் காலடிகளில் விழுந்து மன்னிப்புக் கேட்க வேண்டும். ‘நீ இப்படிப் படித்துச் சாகாதே! யுனிவர்ஸிடியில் முதலாவதாகத் தேறி என்ன செய்யப் போகிறாய்? வேண்டாம், என் பிரார்த்தனையை வாபஸ் வாங்கிக் கொள்கிறேன்’ என்று அவன் உன்னிடம் வந்து கதற வேண்டும். என்ன நினைத்துக் கொண்டிருக்கிறான், அவன்? அவனை விட்டேனா, பார்!” என்று வித்யாசங்கர் உணர்ச்சியுடன் கூறினான்.

‘இந்த உதவி அவன் செய்தால் நாம் உயிர் தப்பலாமே, இந்தத் தொல்லையிலிருந்து ஒருவாறு விடுபடலாமே!’ என்று எண்ணம் ஒருபுறம் எழுந்தது. ஆனால் மறுபுறம், ‘ஒவ்வொரு தடவைக்கும் இவனுடைய உதவியையே நாடுவது என்றால் என்ன அர்த்தம்?’ என்ற எண்ணம் உதித்தது. உடனே என் உள்ளத்தில் தூங்கிக் கொண்டிருந்த சுயமரியாதை விழித்து எழுந்தது. “உன் அனுதாபத்துக்கு என் வந்தனங்கள். ஆனால் இப்படியெல்லாம் செய்வது எனக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. நடந்தது நடந்ததுதான். நான் சொன்ன வாக்கை எப்படியாவது நிறைவேற்றித்தான் ஆகவேண்டும்” என்றேன்.



தகப்பனார் :—என்னடா, கோபு! படுக்கைக்குப் பக்கத்தில் குடையை வைச்சிண்டு ஏன் தூங்கறே?

கோபு : நேத்து மழையிலே நனைஞ்ச மாதிரி கனவு கண்டேன், அப்பா! இன்னைக்கும் நனைஞ்சால் ஜலதோஷம் பிடிக்குமேன்னு வச்சிண்டிருக்கேன், அப்பா!

வித்யாசங்கர் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டவாறு என்னைப் பார்த்தான். “இது நீ எண்ணுவதுபோல் அவ்வளவு சுலபமான காரியம் இல்லையப்பா!” என்றான்.

“ஆமாம், முதலாவதாகத் தேறப் போகிறவனும் நம்மைப்போல ஒரு மனிதன் தானே? தெய்வப் பிறவி இல்லையே?” என்று கேட்டேன்.

வித்யாசங்கர் ஆழ்ந்த யோசனையில் மூழ்கி விட்டான். ‘என்ன செய்யலாம்’ என்று யோசித்தானோ, என்னவோ! சிறிது நேரத்துக்கெல்லாம் அவன் முகத்தில் ஒரு வித ஒளி வீசியது. உடனே புன்முறுவலுடன், “நான் ஒரு மடையன்! இந்தச் சின்ன விஷயம் கூடத் தோன்றவில்லையே, எனக்கு? நீ ஒன்றும் இப்படி உழைத்துப் படிக்க வேண்டாம், அப்பா! உன் உடம்பைக் கவனித்துக் கொள். நீயே ‘யுனிவர்ஸிடி’யில் முதலாவதாக வரும்படி நான் ஏற்பாடு செய்து விடுகிறேன். கவலைப் படாதே!” என்றான்.

நான் ஆச்சரிய மிகுதியினால் ‘ஆ’வென்று வாயைப் பிளந்து கொண்டு, “அது எப்படி முடியும்?” என்று கேட்டேன்.

வித்யாசங்கர் சற்றுப் பரிகாசமாக, “அதைப் பற்றி உனக்கு என்ன? உன்னை விடையைத் தின்னச் சொன்னார்களா, துளையை எண்ணச் சொன்னார்களா? ஏதோ ஒரு நடக்க முடியாத சம்பவம் நடக்கும். ஒரு தேவதை வந்து உன்னிடம் ‘இப்படி எழுது, அப்படி எழுது’ என்று சொல்லிப் போகலாம். அல்லது உன் பரீட்சைத் தாள்கள் தானே விடை யெழுதிக் கொள்ளலாம். அதையெல்லாம் நான் உனக்குச் சொல்ல முடியாது. நாம் எப்படி முதலாவதாகத் தேறினோம் என்று உனக்கே ஆச்சரியமாயிருக்கும். அவ்வளவு தானே?” என்றான்.

“என்ன அப்பா, இது! என்னைப் பரிகாசம் பண்ணுகிறாயே!”

“உன்மேல் ஆணை. நான் உன்னைப் பரிகாசம் செய்யவில்லை. உண்மையைத் தான் சொல்லுகிறேன். முதலில் நீ கவலையை விட்டொழி!”

“ஆமாம், ஒரு வேளை நான் தேறாமல் போய்விட்டால்......”

“போகமாட்டாய்! அப்படிப் போய் விட்டால் நீ என்னை என்ன வேண்டுமானாலும் செய்யலாம்.”

“என் ஆசை என்ன தெரியுமோ, இல்லையோ? யுனிவர்ஸிடியிலேயே நான்

தான் முதலாவதாக இருக்க வேண்டும். உன்னால் பூர்த்தி செய்து வைக்க முடியுமா? நன்றாக யோசித்துச் சொல்."

"கடவுளை நம்பு. அவன் கட்டாயம் வழி விடுவான்."

"ஆமாம், அது கிடக்கட்டும். நீ என்ன செய்வாய்? அதைச் சொல்லு."

வித்யாசங்கர் என் காதுகளில் வெகு ரகசியமாக விஷயத்தைச் சொல்லி விட்டுக் 'கலகல' வென்று நகைத்தான். நானோ பேய் அறைந்தவன்போல் அசையாமல் உட்கார்ந்திருந்தேன். என் காதுகளையே என்னால் நம்ப முடியவில்லை. 'அவன் ரொம்ப நல்லவன்' என்பது எனக்குத் தெரிந்த விஷயமே. ஆனால் எனக்காக இவ்வளவு தூரம் செய்ய முன்வருவான் என்ற எண்ணமே இதுவரையில் எனக்கு உதித்ததில்லை. என் சுயமரியாதை மறுபடியும் எழுந்து உட்கார்ந்து கண்களைக் கசக்கிக் கொண்டது; கொட்டாவி விட்டது; சோம்பல் முறித்தது; மறுபடியும் உடனே படுத்துக் கொண்டு தூங்கிவிட்டது!



சித்திரகுப்தன் :—இந்த ஆசாமி கொடிய பாவம் செய்தவர்; ஆனால் நல்ல சங்கீத ரஸிகர். இவருக்குச் சரியான தண்டனை கொடுக்க வேண்டும்......

யமதர்மன் :—பேஷ்! நேற்று வந்த அபஸ்வர வித்வானை விட்டுப் பாடச் சொல்லி, இவனைக் கட்டிப் போட்டுக் கேட்கச் சொல்லு!

நான் படிப்பதை நிறுத்திக் கவலையற்று இருக்கலானேன். இரவு எட்டு மணிக்குப் படுத்துத் தூங்க ஆரம்பித்தால் காலை எட்டு மணிக்குத்தான் எழுந்திருப்பேன். ரூபராணி என்னைப் பார்த்து உள்ளுக்குள் தானாகச் சிரித்துக் கொள்ளுவாள். 'நீயாவது முதலாவதாகப் 'பாஸ்' செய்யவாவது?' என்று கேலி போலிருக்கும், அவளது சிரிப்பு. 'ஒரு வேளை தேறாமல் போய்விட்டால் .... சமயத்தில் வித்யாசங்கர் நம்மை ஏமாற்றி விட்டால் ......?' என்ற சந்தேகக் கேள்விகள் சில சமயம் எழும். ஆனால் அடுத்த கணமே, 'வித்யாசங்கர் அப்படிப்பட்ட ஆள் இல்லை. அவனைப் பற்றி இம்மாதிரி யெல்லாம் எண்ணுவது மகா பாவம். அவன் சொன்னபடி செய்பவன்' என்ற சிந்தனை யெழுந்து சந்தேகக் கேள்விகளை அழித்து விடும்.

மனம் ஒரு கடல். அதில் எழும்பும் சிந்தனைகள் எல்லாம் அலைகள். கடலில் முன்னே எழும்பிப் போய்க் கொண்டிருக்கும் அலையொன்றை, அதற்குப் பின்னால் வரும் வேறொரு அலை வெகு வேகமாக முன்னேறிக் கண்மூடிக் கண் திறப்பதற்குள் அழித்து விடுகிறதல்லவா? அதேபோல இந்தச் சிந்தனை யலைகளும் மனக் கடலில் இடைவிடாது எழும்பிக் குழப்பி விடுகின்றன.

புரொபஸர்கள், "நான்தான் முதலாவதாக வரப் போகிறேன் என்று வீராப்புப் பேசிக் கொண்டு விழுந்து விழுந்து படித்தாயே, அந்த ஆரம்ப சூரத்தனம் எல்லாம் அடங்கி விட்டதோ, இல்லையோ? எங்களுக்கெல்லாம் முன்னாடியே தெரியும், பணக்காரப் பையன்களுக்குப் படிக்கத் தேகம் வணங்காது என்று! வயிற்றுக்கு இல்லாதவனுக்குத்தான் படிப்பு ஏறும்!" என்று சொல்ல ஆரம்பித்தனர். பையன்களோ, "நல்ல வேளை! சமயத்தில் நிறுத்தி விட்டாய். இல்லாவிட்டால் விழுந்து விழுந்து படித்து உடம்பைக் கெடுத்துக் கொண்டிருப்பாய். இந்த ரூபராணி உன்னை வேலை தீர்த்துவிட வேண்டுமென்றே கங்கணம் கட்டிக் கொண்டிருந்தாள் என்று தோன்றுகிறது. அவள் பேச்சில் மயங்கி உடம்பைக் கெடுத்துக் கொள்ளப் பார்த்தாயே? உனக்கு என்ன அப்பா, அழகிய பெண்களுக்குக் குறைச்சல்? தானாக 'நான் முந்தி, நீ முந்தி' என்று போட்டி போட்டுக்



உஷா தியேட்டர்
சாகுந்தலம்

உலகத்தின் சிரஞ்சீவி மகா இலக்கியங்களில் ஒன்றான காளிதாசனுடைய சாகுந்தலக் கதையை இதற்கு முன் எத்தனையோ பேர் எவ்வளவோ ஆயிரந் தடவை நாடகமாக நடித்திருக்கிறார்கள்; இனியும் நடிக்கப் போகிறார்கள். சென்ற மாதத்தில் சென்னை விக்டோரியா ஹாலில், நாடகக் கலை புனருத்தாரணத்தை முக்கிய நோக்கமாகக் கொண்ட உஷா தியேட்டர் கோஷ்டியார் சாகுந்தல நாடகத்தைப் பல தினங்கள் சேர்ந்தாற்போல் நடித்தார்கள். மேற்படி நாடகத்தில் குறிப்பிடவேண்டிய முக்கிய அம்சம், ரஸ தத்துவத்தை யொட்டிப் புது முறையில் அமைத்திருந்த காட்சி ஜோடனைகள் தான். அந்தந்த கட்டத்தின் உணர்ச்சி பாவத்தை யொட்டிப் பார்ப்பவர்களைக் கற்பனைக் கனவு லோகத்துக்கு அவை கொண்டு போயின. "அபூர்வம்" "அற்புதம்" "இந்தமாதிரி பார்த்ததே யில்லை" என்றெல்லாம் சிறந்த ரசிகர்களிடமிருந்து பாராட்டுதலைப் பெற்ற மேற்படி காட்சி ஜோடனைகளின் சிருஷ்டி கர்த்தாவான ஸ்ரீ ராஜகோபாலன் மேலே தோன்றுகிறார். கீழே சகுந்தலையும் தோழிகளும் துஷ்யந்த மகாராஜனைக் கண்ட அதிசயத்தில் மெய்மறந்து நிற்கிறார்கள்.

கொண்டு வருவார்கள். கவலைப் படாதே!" என்றனர். ஆனால் பரீட்சை முடிவு அனைவரையும் திடுக்கிடச் செய்து விட்டது. நான் யுனிவர்ஸிடியிலேயே முதலாவதாகத் தேறிவிட்டேன்.

நகரம் பூராவும் இந்தச் செய்தி ஒரு பரபரப்பை உண்டுபண்ணியது. புரொபஸர்களும், மாணவர்களும் ஆச்சரியப்பட்டனர். "இதென்ன, மந்திரஜாலமாக அல்லவா இருக்கிறது? சத்தியசோராவது யுனிவர்ஸிடியிலேயே முதலாவதாகத் தேறவாவது?" என்று சிலர் ஆச்சரியத்துடன் பேசிக் கொண்டனர். வேறு சிலர், "தேவலை அப்பா, இவன்! 'பார்த்தால் பசு; பாய்ந்தால் புலி' என்பார்களே, அப்படியல்லவா ஆகிவிட்டான்? 'இவன் சுத்த மக்கு, பரீட்சையில் பாஸ்கூடச் செய்யமாட்டான்' என்று எண்ணியிருந்தோமே, முதலாவதாக அல்லவா வந்துவிட்டான்?" என்று வியந்தனர்.

வித்யாசங்கர்தான் முதலாவதாகத் தேறுவான் என்று எல்லாருமே நம்பியிருந்தனர். ஆனால் அவனுக்குச் சாதாரண 'பாஸ்'தான் கிடைத்திருந்தது. இன்னும் கொஞ்சம் மார்க்கு குறைந்திருந்தால் பாஸே ஆகியிருக்க மாட்டான். அவனைப் பற்றிச் சிலர், "தான்தான் கெட்டிக்காரன் என்று அவனுக்குக் கர்வம் தலைக்கேறி யிருந்தது. வேண்டும், அவனுக்கு நன்றாக வேண்டும்!" என்றனர். வேறு

சிலர், "அவன் கெட்டிக்காரன்தான். இந்த ரூபாராணியின் வலையில் சிக்கி ஏமாந்து போய்விட்டான். இல்லாவிட்டால் அவனை மிஞ்ச வேறு யார் இருக்கிறார்கள்? உழவுக்கும் அக்கினி ஹோத்ரத்துக்கும் ஒத்து வருமா? படிக்கவும் வேண்டும், காதலும் புரியவேண்டும் என்றால் முடிந்த காரியமா? அதுதான் இப்படிப் போய் விட்டான்!" என்று அங்கலாய்த்தனர்.

"இல்லை இல்லை, இதில் ஏதோ சூது நடந்திருக்கிறது. இவ்வளவு காலம் வரை வகுப்பிலேயே முதன்மையாக இருந்து வாத்தியார்கள் எல்லோராலும் புகழப்பட்ட வித்யாசங்கர் இவ்வளவு குறைந்த மார்க்குகள் வாங்குவானா? ஒன்றுக்கும் பிரயோஜனம் இல்லாத சந்திசேகர் வகுப்பிலேயே முதன்மையாகப் பாஸ் செய்வானா?" என்றார்கள் வேறு சிலர்.


இதையெல்லாம் என் காதுகளால் கேட்ட நான் என்னையே நொந்து கொண்டேன். அவனை எண்ணி எண்ணி என் மனம் மிகவும் வருந்தியது. 'எல்லா ரகசியத்தையும் அம்பலப் படுத்தி அவனுடைய மரியாதையைக் காப்பாற்றி விடுவோமே!' என்ற எண்ணம்கூட என் மனத்தில் அடிக்கடி எழுந்தது. ஆனால் துணிவு மட்டும் ஏற்படவில்லை. பகல் பூராவும் வாழ்த்துக் கூற வருபவர்களின் கூட்டம் என் வீட்டில் குழுமியது. மாணவர்களும், புரொபஸர்களும் வந்து போன வண்ணமாக இருந்தனர். ஆனால் ரூபாராணியும், வித்யாசங்கரும் மட்டும் வரவேயில்லை. (தொடரும்)

ஆலயத் திறப்பு


★

சென்ற இதழ் அட்டைப் படத்தில் தடாகக் கரையில் நின்று தியானம் செய்த சுவாமியார்தான் தர்மபுர ஆதீனகர்த்தரா என்று சிலநேயர்கள் கேட்டிருக்கிறார்கள். இல்லை; அந்த சுவாமியார் ஸ்ரீ சத்தியானந்த சரஸ்வதி என்னும் தேசத்தொண்டர். தர்மபுரம் ஸ்ரீலஸ்ரீ பண்டாரசந்நிதி சுவாமிகளை இந்தப் படத்தில் காணலாம். பக்கத்தில் உள்ள கூட்டப் படத்தில் மந்திரி கோடி செட்டியாருக்கு இருபுறத்திலும் தர்மபுரம் மடத்து மானேஜரும், சீகாழி திருக்கோயில் ஸ்ரீலஸ்ரீ கட்டளைத் தம்பிரான் அவர்களும் நிற்கிறார்கள்.

★







மாய மோதிரம்

வி. எஸ். சீனிவாசன்

அமராபுரியின் அரசன் தன் மகளை மந்திரி குமாரனுக்கு மணம் செய்விக்க விரும்பினான். ராஜகுமாரிக்கு மந்திரி குமாரனைக் கல்யாணம் செய்து கொள்ளப் பிடிக்கவில்லை. ஆகவே, "அப்பா! நான் ஒரு மோதிரத்தைச் சமுத்திரத்தில் எறிந்து விடுகிறேன். அதை யார் எடுத்துக் கொண்டு வந்து தருகிறாரோ, அவரை நான் கல்யாணம் செய்து கொள்கிறேன்" என்றாள்.

பல ராஜ குமாரர்கள் ராஜகுமாரியைக் கல்யாணம் செய்து கொள்வதற்காகச் சமுத்திரத்தில் மூழ்கி மோதிரத்தை எடுத்து வர முயன்றனர்; முடியவில்லை. ஏன் தெரியுமா? அதுதான் மாய மோதிரம் ஆயிற்றே!

ஒரு நாள் ஓர் இடையன் அரசனிடம் வந்து, "அரசே! நான் மோதிரத்தைக் கொண்டு வந்தால் எனக்கு உங்கள் பெண்ணை மணம் செய்விப்பீரா?" என்று கேட்டான். அரசனும் அதற்குச் சம்மதித்தான்.

வழியில் இடையன் ஒரு குதிரை பசியால் வாடுவதைக் கண்டான். உடனே அவன் சிறிது புல்லைப் பிடுங்கி அதற்குக் கொடுத்தான். அது பசியாறியவுடன், "நீ நினைக்கும்போது நான் வருகிறேன்!" என்றது.

பிறகு அவன் சிறிது தூரம் சென்றான். அங்கே ஒரு பையன் ஒரு மீனைத் துன்புறுத்திக் கொண்டிருந்தான். உடனே இடையன் அதை அவன் கையிலிருந்து விடுவித்தான். மீனும் சந்தோஷத்துடன் அவனை நோக்கி, "நானும் நீ நினைக்கும்போது வருகிறேன்!" என்றது.



சிறிது நேரத்துக்குப் பிறகு இடையனுக்குக் கால் வலித்தது. உடனே அவன் குதிரையை நினைத்தான். குதிரை வந்து அவனைக் கடற்கரையில் கொண்டு போய்ச் சேர்த்தது. அங்கே சென்றதும் அவன் மீனை நினைத்தான். அதுவும் வந்து சேர்ந்து, அவன் விரும்பிய மாய மோதிரத்தை எடுத்துக் கொண்டு வந்து கொடுத்தது.

இடையன் அளவில்லாத சந்தோஷத்துடன் அந்த மாய மோதிரத்தைப் பெற்றுக் கொண்டு அரண்மனையை அடைந்தான்.

"இவனுக்கா நம் பெண்ணைக் கொடுப்பது!" என்ற வருத்தத்துடன் அவனிடமிருந்த மோதிரத்தை வாங்கினான் அரசன். அதே சமயத்தில் ராஜகுமாரி ஓடோடியும் வந்து அந்த இடையனுக்கு மாலையிட்டாள்!

என்ன ஆச்சரியம்! மறு நிமிஷமே இடையன் சகல லட்சணங்களும் பொருந்திய சௌந்தரிய ராஜகுமாரனாக மாறி விட்டான்!

வியப்புடன் தன்னை நோக்கிய அரசனைப் பார்த்து, "நானும் ஒரு ராஜகுமாரன்தான். சமீபத்தில் என் விஷமத்தனத்தின் காரணமாக நான் ஒரு ரிஷியின் சாபத்துக்கு ஆளானேன். அவர் வாக்களித்திருந்தபடி தங்கள் குமாரி எனக்கு மாலையிடவே விமோசனம் அடைந்தேன்!" என்றான் இடையன்.

கவலை நீங்கிய அரசன் அவர்களை அன்புடன் ஆசீர்வதித்தான்.

'மைக்'கின் மகாத்மியம்


சுபஸ்ரீ

எங்கள் ஊர் 'மண்டை வீங்கி' மகா பூதமய்யரைப் பார்க்கும் போதெல்லாம் எனக்கு மைக்கின் ஞாபகம்தான் வரும். குருவியின் தலையில் பனங்காய் வைத்தது போல் அவரது மெலிந்த தேகத்தின் உச்சியில் யாழ்ப்பாணம் தேங்காய் போன்ற அவருடைய தலையைப் பார்த்தவுடன் 'டக்' கென்று பிரசங்க மேடையில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் மைக்கின் உருவம் தான் என் கண் முன் தோன்றுகிறது!

அடாடா! மைக்கைப் பற்றிச் சொல்ல முற்பட்டு, அதை அடியோடு மறந்துவிட்டு மகாபூதமய்யரைப் பற்றி அல்லவா ஆரம்பித்து விட்டேன்?

இழுக்க இழுக்க உயர்ந்து கொண்டே வரும் இந்த மைக்கின் அருமை பெருமைகளை என்னவென்று உரைக்க? அதனால் மக்களுக்கு ஏற்பட்ட பலவகையான உபயோகங்கள் தான் எத்தனை?

கோடிக்கணக்கான மக்கள் 'ஜே ஜே' என்று குழுமியிருக்கும் கூட்டத்திலே மகாத்மாவின் உருக்கமான பேச்சையோ, ராஜாஜியின் சாதுர்யமான பிரசங்கத்தையோ, நேருவின் வீர கர்ஜனையையோ எல்லோருமே கேட்க வேண்டுமென்றால் அதற்குக் கட்டாயம் ஒலிபரப்பு ஏற்பாடு இருந்துதானே ஆக வேண்டும்? இது மட்டுமா? ஆயிரக்கணக்கான சங்கீத ரஸிகர்கள் ஆவலுடன் திரண்டிருக்கும் பந்தலிலே, இசைவாணியின் இனிய கானத்தை மைக்கின் உதவியில்லாமல் எல்லோருமே கேட்டு அனுபவித்துத் தலையாட்ட முடியுமா, பின்ன? எந்த மகாநாடு ஆகட்டும், கச்சேரி ஸீரீஸ் ஆகட்டும் மைக் என்ற நவீன அற்புத சிருஷ்டி இல்லாமல் வெற்றிகரமாக நடந்துவிடக் கூடும் என்கிறீர்களா? அவ்வாறு நடந்தால்தான் அது சோபிக்குமா?



எந்த விழாக்களிலோ, விசேஷக் கூட்டங்களிலோ நிர்வாகிகள் எத்தகைய ஜனத் தொகையை எதிர் பார்க்கிறார்கள் என்பதை இந்த மைக் சாதனம், உடம்பின் உஷ்ணத்தை உள்ளபடி தெரிவிக்கும் 'தர்மாமீட்டர்' போல விளக்கிக் காட்டுகிறது. 'கூட்டத்துக்கு வரும் ஸ்திரீகளுக்குப் பிரத்யேக இட வசதிகள் உண்டு' என்பது போல் 'ஒலிபரப்பு ஏற்பாடுகளும் உண்டு' என்று ஒரு வரி நோட்டீஸில் பிரசுரித்தால்தான் அது 'ஓஹோ' என்று சொல்லும்படியான அவ்வளவு பெரிய கூட்டம் என்று தோன்றும், பொது ஜனங்களுக்கு!

இவ்வாறு கூட்டத்துக்கு வரும் ஜனத் தொகையைத்தான் மைக் சமாராக அளந்து காண்பிக்க முடியும் என்று எண்ணி விடாதீர்கள். "அறிவிலும் உருவிலும் சிறியேன் ஆகிய நான்......" என்று ஆரம்பித்து அரை மணி நேரம் மழை காலத்து மண்டூகம் போல் சோடாவுக்குப் பிடித்த கேடாய்க் கத்தித் தொலைக்கின்ற பிரசங்கிகளின் உயரத்தையும் அது அளந்து சொல்லிவிட முடியும். பேசுபவர்கள் ஒவ்வொருவரும் காகாத்த தங்களது தொண்டையைக் கனைத்துக் கொண்டு கோடையிடிப் பிரசங்கத்தைத் தொடங்குவதற்கு முன்பாக அவர்களது உயரத்துக்குத் தக்கவாறுதானே மைக்கின் நீளமும் 'அட்ஜஸ்ட்' செய்யப்படுகிறது? இதனால் மாறி மாறி மக்கள் முன்பாக மேடைமீது தோன்றும் பிரசங்கிகளின் உயர வித்தியாசங்களை எல்லா ஜனங்களும் அப்பட்டமாக அறிந்து கொள்ளும்படியல்லவா செய்து விடுகிறது, இந்தப் பொல்லாத மைக்?

நிற்க, ஊரிலே எல்லோரும் அறிந்த மனிதனாக வேண்டுமென்ற அடக்க முடியாத ஆசை இளமை முதலே என் உள்ளத்தில் வேரூன்றி வந்தது. ஆனால் அதைக் காரியாம்சத்தில் காட்டுவது எப்படி என்பதுதான் எனக்குப் பிடிபடவே இல்லை. நல்ல வேளை, இதற்குச் சமய சஞ்சீவி போல் வந்து சேர்ந்தான் சேது. பிரபல புள்ளி

யாக வேண்டுமென்றால் அதற்குத் தலைசிறந்த பிரசங்கியாவதைத் தவிர வேறு வழியில்லை என்று அழுத்தந் திருத்தமாகத் தனது அபிப்பிராயத்தை வெளியிட்டு விட்டான். அவனுடைய அற்புதமான யோசனையைப் பின்பற்றி பலமான ஏற்பாடுகள் செய்ய ஆரம்பித்தேன். பெரிய பேச்சாளனாகப் பிரகாசிக்க மைக் முன்னால் பேசிப் பழகிக் கொள்ள வேண்டாமா? அதற்காக மறுதினமே சிரமப் பட்டு ஒரு நல்ல கழியாகத் தேடிப் பிடித்து, அதன் தலையிலே ஒரு டம்ளரைக் கவிழ்த்து அதை என் முன்னால் நிறுத்திக் கொண்டு பேசத் தொடங்கினேன். ஆனால் அந்த சாதகம் அதிக நாட்கள் நீடிக்கு முன்பே சேதுவின் அந்தரங்க சூழ்ச்சி எனக்குப் புலப்பட்டு விட்டது. சமீபத்திலே அவன் கட்டப் போகும் வீட்டுக்கு வேண்டிய கற்கள் சேகரிப்பதற்காகவே அந்தப் பழிபாவி என்னைப் பிரசங்கி ஆகும்படி தூண்டினானாம்!



இவ்வாறு பிரசங்கம் செய்வதன் மூலம் பிரபல மனிதனாக எண்ணிய எனது ஆசை, இறுதியாக 'மைக் ஆபரேட'ராக முயற்சி செய்வதில் முடிந்தது என்றால் என்னவோ ஏதோ வென்று ஆச்சரியப்பட்டு விடாதீர்கள். 'மைக் ஆபரேட'ருக்கு இல்லாத பிரபலத்வமா மற்றவர்களுக்கு வரப் போகின்றது? என் என்று கேட்கிறீர்களா? பெரிய கூட்டங்களிலோ, கச்சேரிகளிலோ அடிக்கொரு தரம் மேடைக்குச் சென்று, அங்கு 'சிவனே' என்று சும்மா நிற்கின்ற மைக்கை அப்படி இப்படி கொஞ்சம் திருப்பிவிட்டு, வரும் பொழுது சபையை நோக்கித் தளுக்காக ஒரு புன்னகை புரிவதால் வரும் பிரபலத்வமும் அதனால் ஏற்படும் பெருமையும் எவ்வளவு பிரம்மாண்டமானது என்று நினைக்கிறீர்கள்? இந்த 'மைக் ஆபரேடர்'கள் சபையோரின் கவனத்தைக் கவருவது போல் வேறு யார் கவருகிறார்கள்?



இந்த மைக்கினால் மேற்படி ஆபரேடர்கள் மட்டும் தானா பயனடைகிறார்கள்? சில அரைகுறை சங்கீதப் பிச்சுக்கள் இருக்கின்றனவே, அவர்கள் அடையும் நன்மை கணக்கிட முடியாது. இப்பொழு தெல்லாம் 'மைக்குக்கு ஏற்ற தொண்டை' என்று சில வார்த்தைகள் அடிக்கடி காரசாரமான ரேடியோ விமர்சனங்களில் காணப்படுகிறதே, அதைக் கவனித்திருக்கிறீர்களா? கர்ண கடூரமான சாரீரம் படைத்த வித்வான்களின் குரலைக்கூட கனலாகவமாக மாற்றி, வெகு சுலபமாகச் சோபிக்கச் செய்யும் அமானுஷ்ய சக்தி இந்தச் சின்னஞ்சிறு மைக்கினிடம் அடங்கிக் கிடக்கிறது.

பாடகர்களை உயர்த்தி வைக்கின்ற மைக்குக்கு அணுக்குண்டுபோல அவர்களை அடியோடு ஆழ்த்தக்கூடிய சக்தியும் உண்டு. அருகிலிருக்கும் 'ஆம்ப்ளிபையர்' சரியாக வேலை செய்யாமல் 'ஸ்டிரைக்' செய்து விட்டால், பயங்கர சிம்ம கர்ஜனையோ, ஏ. ஆர். பி. அழுகுரலோ அறை முழுவதும் வியாபித்து, அப்படியே ஆட்களைத் தட்டி எழுப்பி, கூட்டத்தைக் குட்டிச் சுவராக அடித்து விடாதா?

இப்படிப்பட்ட மைக்கின் அற்புதமான திறனை எப்படியோ உணர்ந்த சில விஷமக்கார ஆசாமிகள் சென்ற தடவை பம்பாயில் நடைபெற்ற அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் அது வேலை செய்ய முடியாதபடி, ஹனுமார் வால் போன்ற அதன் ஜீவநாடியான 'வயர்'களை அறுத்து எறிந்து விட்டார்கள் என்றால், இதிலிருந்தே தெரியவில்லையா மைக்கின் பெருமை?

இம்மாதிரி மைக்கைப் பற்றி நான் ஒரு விரிவான வியாசம் எழுதி மேஜையில் வைத்ததை எப்படியோ எனது ஸகதர்மிணி படித்துவிட்டு விழுந்து விழுந்து சிரிக்க ஆரம்பித்துவிட்டாள். எல்லோர் காதிலும் கணீர் என்று விழும்படியாகப் பேசுவதற்கு இந்த அப்பாவி ஆண்பிள்ளைகள் மட்டும்தான் மைக்கின் உதவியை நாடுகிறார்களாம்!

வாஸ்தவம்தானே? இந்தக் குரல் விஷயத்தில் மட்டும் பெண்களிடம்,—அதிலும் நம்ம வீட்டுக் கிரகலக்ஷ்மியிடம்,—அபாரசக்தி வாய்ந்த மைக்குகள் கூட வெற்றிகரமாகப் பின்வாங்கத்தானே வேண்டியிருக்கிறது?

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladen's Garden, Poonamalle High Road, Kilpauk, Madras.

கல்கி



ALKI பிப்ரவரி ௯, 1947 **4** அணா

REGD. NO. M. 4392

